
ஞானகுரு

# மகிழ்ச்சி

₹100/-

மே 2022

எஸ்.கே.முருகன்



## முடிந்தது, முடிந்து போனதுதான்








# வரம் என்பது யாதெனில்..?

கடவுள் கண் முன்னே காட்சியளித்து, ‘மகனே நீ விரும்பும் வரம் தருகிறேன்... பெற்றுக்கொள்’ என்று ஆசைப்பட்டதை எல்லாம் அள்ளிக்கொடுக்க வேண்டும் என்பதுதான், பெரும்பாலான மனிதர்களின் விருப்பம்.

தவம் செய்தால் வரம் கிடைக்கும் என்பது ஒரு நம்பிக்கை என்றாலும், யாரும் அப்படியெல்லாம் முயற்சி செய்வதில்லை. ஏனென்றால் அதெல்லாம் மிகவும் கடினம். அதுதவிர, வரம் வாங்கிய எவரும் இன்றுவரை உருப்படியாக அதனை பயன்படுத்தியதாக கதைகளும் இல்லை.

அப்படியென்றால் வரம் என்பது ஹம்பக்தானா?

இல்லவே இல்லை. ஒவ்வொரு மனிதரிடமும் தனித்தன்மையான ஒரு வரம் ஒளிந்திருக்கிறது. அதனை கண்டுபிடிப்பவர், மகிழ்ச்சியை எளிதில் அடைந்து விடுகிறார்.

எல்லோரிடமும் ஒரு தனித்தன்மை ஒளிந்திருக்கிறது என்றால், அதனை ஏன் அனைவரும் கண்டுபிடிப்பதில்லை?

ஏனென்றால், எல்லோரும் தேடுவது இல்லை. நான் யார், நான் இங்கே என்ன செய்கிறேன், மற்றவர்களைவிட என்னிடம் என்ன தனித்தன்மை இருக்கிறது என்று உள்ளுக்குள் மீண்டும் மீண்டும் தேட வேண்டும். அவ்வளவுதான்.

அந்த தனித்தன்மை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம், எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஏதோ ஓர் அரிய தன்மையாகத்தான் இருக்கும் என்பதில்லை, மிகமிக சாதாரண ஒன்றாகவும் இருக்கலாம்.


குழம்பு அடுப்பில மணக்கும்போதே, அதன் நிறை, குறைகளை சொல்லும் சுவையறியவாக இருக்கலாம். சிரிப்பாக இருக்கலாம். உழைப்பாக இருக்கலாம். தைரியமாக இருக்கலாம், பொறுமையாக இருக்கலாம். எழுத்தாக இருக்கலாம். கலை ரசனையாக இருக்கலாம். இசையாக இருக்கலாம். அறமாக இருக்கலாம். ஏன், பயமாகவும், கோபமாகவும், உடல் பலமாகவும் இருக்கலாம்.

எது உங்கள் தனித்தன்மை என்பதை நீங்கள் உறுதி செய்யுங்கள். அது உங்களுக்கு சந்தோஷமும் நம்பிக்கையும் தருகிறதா என்று பாருங்கள். ஆம் என்றால், அதுவே உங்கள் தனித்தன்மை. அதனை உங்களுடைய வரமாக மதித்து, பிறருக்கும் புரியவைக்க வேண்டியதுதான் நீங்கள் செய்யவேண்டிய பணி.

உங்களுடைய வரத்தை வாழ்க்கை முழுவதும் மீண்டும் மீண்டும் பயன்படுத்திக்கொண்டே இருங்கள், அதுதான் மகிழ்ச்சி தரும் மந்திரம்.

**ஆசிரியர்**

# முரண் எனும் நண்பன்!



வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதான் மனிதர்களின் குறிக்கோள் என்றாலும், அதில் எல்லோருக்கும் ஒரு நிபந்தனை உண்டு. அதாவது அக்கம்பக்கத்து வீட்டுக்காரனைவிட, உறவினர், நண்பர்களைவிட சந்தோஷமாக வாழ்வதைத்தான் வெற்றிகரமான வாழ்க்கையாக கருதுகிறார்கள். அப்படியில்லை என்றால் வாழ்வில் தோற்றுப்போனதாக நினைக்கிறார்கள்.

இது கொஞ்சம் ஓவரான ஆசை என்றாலும் அடைவது மிகவும் எளிது. ஆம், வாழ்வின் மொத்த முரண்களையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அடைந்துவிட்டால் அமோக மகிழ்ச்சி கிடைத்துவிடும். ஆனால் மகிழ்ச்சிக்கு ஆசைப்படுபவர்கள் முரண்பாடுகளைக் கண்டு அச்சப்படுவதுபோல் நடித்து, முரணாக வாழ்கிறார்கள்.

www.gyanaguru.com



### அதென்ன முரண்பாடு?

முரண்பாட்டின் மொத்த உருவம் என்று மனிதனை சொல்லலாம். நான் எப்பவும் ஒரே மாதிரி இருப்பேன், ஒரே மாதிரி பேசுவேன் என்று சொல்வான். ஆனால், அப்படியிருக்க ஒருவராலும் இயலாது ஏனென்றால்... அன்பாக இருக்கும் மனிதன் ஆக்ரோஷம் அடைவதும் சகஜம். பாசமாக இருப்பவனே... தனக்கு தேவை எனில் வேஷம் போடுகிறான். தன் மனைவியை நேசிப்பவன் இன்னொரு பெண்ணின் நகையை அறுக்கிறான். தான் வாழ்வதற்கு பிறரை கொலை செய்கிறான். இத்தனை முரண்பாடு கொண்டவனாகத் திகழும் மனிதன் வாழ்க்கை முரண்களை எதிர்கொள்வதற்கு கொஞ்சமும் விரும்புவ தில்லை. இதனை விளக்குவதற்கு ஒரு கதை.

ஒரு மனிதன் மிருகங்களை வேட்டையாடு வதற்காக காட்டுக்குள் போனான். எப்படியோ பாதை மாறிவிட்டான். நாலைந்து நாட்கள் எங்கெங்கோ அலைந்தும் ஊர் திரும்பும் பாதையை கண்டறிய இயலவில்லை. அந்தக் காட்டுக்குள் ஆறு போகும் பாதையைக் கண்டறிந்து, அதன் பாதையில் சென்றான். தூரத்தில் மனித குரல் கேட்டு சந்தோஷமாகி விட்டான். அருகே சென்றதும், அது ஆதிவாசிகள் வாழும் கிராமம் என்பது புரிந்தது.

அங்கே ஆண்களும் பெண்களும் நிர்வாணமாகத் திரிந்தார்கள். ஆடையுடன் ஒரு மனிதனைப் பார்த்ததும் அவர்களுக்கு சிரிப்போ சிரிப்பு. சரியான முட்டாளாக இருக்கிறானே இந்த புதிய மனிதன். காற்று, வெயில் உடலில் படாதவகையில் ஏன் இவன் உடலை மூடிக் கொண்டு இருக்கிறான் என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள். ஆனாலும் அவனுக்கு விருந்தோம்பல் செய்தார்கள்.

மரத்தில் இருந்து சில கொப்புகளை இழுத்துப் போட்டு, மா இலை மாங்காய், பூக்களை தனியே உதிர்த்துக் கொடுத்தார்கள். எதற்காக கொடுக்கிறார்கள் என்று ஆச்சர்யமாகப் பார்த்தான். உடனே ஒரு ஆதிவாசி மனிதன் அவற்றை வாயில்போட்டு சாப்பிட்டுக் காட்டினான். அங்கே இருக்கும் அனைவருமே மிருகங்களைப் போன்று இலை, தழை, காய், கனிகளை, மாமிசங்களை அப்படியே சாப்பிட்டு உயிர் வாழ்கிறார்கள் என்பதை அறிந்து அதிர்ந்தான். இரவில் தூங்கவேண்டும், பகலில் விழிக்கவேண்டும் என்ற வரையறை இல்லாமல், இஷ்டப்பட்ட நேரத்தில் தூங்கினார்கள், நினைத்த நேரத்தில் எழுந்தார்கள். இருட்டும், வெளிச்சமும் அவர்களுக்கு ஒன்றாகவே இருந்தது.

அந்த மக்களுக்கு நாகரிகம் சொல்லித்தர விரும்பினான் வேட்டைக்காரன். தான் கொண்டுபோயிருந்த சப்பாத்தியில் ஜாம் தடவி அவர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் இனிப்பை மிகவும் விரும்புவார்கள் என நினைத்தான். ஆனால், அதை வாயில் வைத்ததும் கீழே துப்பினார்கள். ஆம், அவர்களுக்கு இனிப்பு சுவை பிடிக்கவில்லை.

**மந்திரச்சொல்**

ஆசைப்படும் எல்லாவற்றையும் வாங்கிவிட முடியாது. ஆனால், வாங்கிய எல்லாவற்றின் மீதும் ஆசை வைக்க முடியும்.

ஆடை உடுத்திக்கொண்டு மானத்துடன் வாழவேண்டும் என்று சொன்னவனை விசித்திரமாகப் பார்த்தார்கள். இனிமேலும் அங்கே இருக்கமுடியாது என்று தெரிந்ததும், ஆதிவாசிகள் உதவியுடன் தன்னுடைய ஊருக்குத் திரும்பினான். ஆதிவாசிகள் முழுமையாக முரண்பட்ட வாழ்க்கை வாழ்வதாக யோசித்தவனுக்கு, திடீரென ஓர் உண்மை புலப்பட்டது. அதாவது அந்த ஆதிவாசிகள் பார்வையில் இன்றைய மனிதர்கள்தான் முரண் வாழ்க்கை வாழ்கிறார்கள். உண்மைதான். முரண் என்பது மனிதனுக்கு மனிதன், சமூகத்திற்கு சமூகம், காலத்துக்கேற்ப மாறுபடுகிறது.

அடுத்தவர் முரண்பட்டு இருப்பதாக அல்லது நீ முரண்பட்டுள்ளதாக நினைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. அனைத்து முரண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வாழு. அதுதான் உண்மையான சுதந்திரம்.

### இந்தக் கதையில் இருந்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வெற்றியை விரும்பும் மனிதன் தோல்வியை விரும்புவதில்லை. செல்வத்தை விரும்புபவன் வறுமையை விரும்புவதில்லை. சுதந்திரத்தை விரும்புபவன் கட்டுப்பாடுகளை எதிர்க்கிறான். வெளிச்சத்தை விரும்புபவன் இருட்டைக் கண்டு அச்சப்படுகிறான். சுருக்கமாக இவ்வுலக வாழ்வில் இன்பத்தை மட்டுமே விரும்புகிறான், துன்பம் வரக்கூடாது என்று நினைக்கிறான். ஒரு நாணயத்தில் தலை, பூ இரண்டுமே இருக்கும். மெழுகுவத்தியில் வெளிச்சம் மட்டுமல்ல, அதன் நிழலும் இருக்கும். அதனால் முரண்பாட்டை விலக்கிவிட்டு இன்பத்துடன் மட்டும் வாழ்வது நடக்காத விஷயம். இரண்டையும் ஏற்கத் தெரிந்தவனே இன்பத்தை எளிதில் கண்டடைய முடியும்.

### முரண்களை ஏன் ஏற்கவேண்டும்?

உண்மையில் மனிதனின் நண்பன் முரண்தான். உடலில் ஏதேனும் ஓர் இடத்தில் வலி உண்டாகும்போது வேதனையாக இருக்கும். ஆனால் அந்த முரண் உடலுக்கு நன்மை செய்வதாகவே இருக்கும். அதாவது அந்த குறிப்பிட்ட இடத்தில் ஏன் வலி உண்டாகிறது என்று ஆய்வு செய்யவேண்டிய அவசியம் உண்டாகும். அந்த குறிப்பிட்ட இடத்திலுள்ள உறுப்பின் பிரச்னைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டதும் அந்த வேதனை மறைந்துவிடும். வலியை அனுபவிப்பவனுக்குத்தான் ஆரோக்கியத்தின் ருசி தெரியும். தோல்வி அடைந்தவனுக்குத்தான் வெற்றியின் மகத்துவம் புரியும். நஷ்டம் அடைந்தவனுக்குத்தான் லாபத்தின் மகிமை தெரியும். அதனால் முரணுக்கு ஆசைப்படு.

### எனக்கு வருமானம் குறைவு, செலவு அதிகம். அதற்காக செலவை வரவேற்க முடியுமா?

செலவு செய்யத்தான் வருமானத்தை தேடுகிறாய். செலவே இல்லை என்றால் வருமானம் தேடுவதற்கு அர்த்தமே இல்லை. செலவு அதிகரிக்கும்போது உனக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று வருமானத்தை அதிகரிப்பது, அடுத்தது செலவை குறைப்பது. இரண்டுமே எளிய வழிகளே. ஆனால் எந்த செலவுமே குறைக்கமுடியாததாகவே தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. திடீரென இயற்கை சீற்றத்தால் வீட்டைவிட்டு வெளியே போகமுடியாத அளவுக்கு நிலைமை மோசமடைகிறது என்றால், உன்னால் வீட்டில் இருக்கும் பொருட்களை வைத்து, நிச்சயம் ஒரு வாரம் அல்ல ஒரு மாதம்கூட சமாளிக்க முடியும். ஆனால் சாதாரண நாட்களில் ஒரு வேளையைக்கூட சமாளிக்க முடியாமல் தடுமாறுவாய். அதனால் வரவும் செலவும் உன் கையில்தான் இருக்கிறது.

### ஆனாலும் முரண் இல்லாத வாழ்க்கை கிடைக்காதா?

ஆணும் பெண்ணும் காலம் காலமாக சண்டை போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஏனென்றால் பெண்ணுக்கு ஆண் முரண், ஆணுக்கு பெண் முரண். ஆனால் ஆண் இல்லாத உலகத்தை பெண்ணும், பெண் இல்லாத உலகத்தை ஆணும் நினைத்துக்கூட பார்க்கமுடியாது. அதனால் முரண் என்பதை எதிரியாகப் பார்க்காதே, கவர்ச்சியாகப் பார். எல்லாம் இன்பமாகத் தெரியும்.

### முரண்பாட்டைத் தாண்டிய ஓர் உண்மை..?

பெற்றோர் பிள்ளை மீது உயிரையே வைத்திருப்பார்கள். ஆனால் பிள்ளையின் கண்களுக்கு பெற்றோர் எதிரிகளாகத் தெரிவார்கள். இந்த சக்கரம் சுழலும்போது வாழ்க்கை கைமீறி போயிருக்கும்.


www.gyanaguru.com



அத்தியாயம்-5
பயிர் வளர்த்தால்...
களை அகலும்

# ஆழ்மனமே தாழ் திறவாய்!

தெரு மக்களுக்கு பெருத்த தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்த ரவுடி ஒருவன், திடீர் விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடுகிறான் என்ற தகவல் தெரியவந்தால், உங்கள் எண்ணம் என்னவாக இருக்கும் என்று கேட்டிருந்தேன்.

- **ஆண்டவன் சரியான தண்டனை கொடுத்திட்டான்.**
- **இனிமேல் ரவுடி தொல்லை இல்லாம நிம்மதியா இருக்கலாம்.**
- **அவன் வேகமா செத்துடக்கூடாது, துடிதுடிச்சு சாகணும்.**

இதுபோன்ற எண்ணம் மனதில் தோன்றியதா...? நல்லது, உங்களிடம் வெறுப்பு, கோபம், ஆத்திரம் மண்டிக் கிடப்பதால் தீய எண்ணங்களே மனம் முழுவதும் நிரம்பியிருக்கின்றன. ஆனால் இப்படித்தான் அதிகமான நபர்கள் நினைக்கிறார்கள் என்பது உண்மை. தவறு செய்தவனுக்கு தண்டனை கிடைப்பது நியாயம் என்ற ரீதியில் யோசிக்கும் எண்ணத்தில் தவறு இல்லைதான், அதேநேரம் இது நல்ல சிந்தனையும் இல்லை.

அப்படியென்றால், நல்ல எண்ணம் உள்ளவர் எப்படி யோசிப்பார்?

- **அய்யோ பாவம்... கடவுளே ரவுடியா இருந்தாலும் அவனுக்கு எந்த ஆபத்தும் வராம காப்பாத்து**
- **அவனோட குடும்பம் என்ன பாடுபடுமோ...? இனியாவது அவன் பிழைச்சு எழுந்து திருந்தி வாழட்டும்.**
- **இவனுக்கு ஏற்பட்ட நிலையைப் பார்த்து மத்தவங்க குடிக்கிறதை நிறுத்துனா நல்லது.**

இந்த வகையில் வருவதுதான் நல்ல எண்ணங்கள். ஆனால் யாருக்கும் நல்ல சிந்தனைகள் பிடிப்பதில்லை. எல்லோருக்குமே எதிர்மறை சிந்தனையே அதிகம் பிடிக்கிறது. விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் காட்சி ஒரு தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் நேரம், ஆரோக்கிய வாழ்க்கைக்கு உதவும் நடைபயிற்சி பற்றிய நிகழ்ச்சி வேறு ஒரு தொலைக் காட்சியில் ஓடுகிறது என்றால், எந்த நிகழ்ச்சியை விரும்பிப் பார்ப்பார்கள் என்று சொல்லவே தேவையில்லை. விபத்தில்

yanaguru.com

இந்த உலகில் நடக்கும் அனைத்து விஷயங்களையும் பகுத்து ஆராயும் அளவுக்கு மனித மூளைக்குத் திறன் இல்லை என்பது உண்மைதான். அதாவது, ஏன் நடக்கிறது என்று தெரியாமலே பல்வேறு விஷயங்கள் நம் வாழ்க்கையில் நடந்துகொண்டே இருப்பதுண்டு.

சிக்கி சின்னாபின்னமான உடல்களைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். ரோட்டில் இரண்டு பேர் கெட்டவார்த்தை பேசி சண்டை போட்டுக்கொண்டு இருந்தால், எப்போது அடிதடியாக மாறும் என்று ஆர்வத்துடன் நின்று வேடிக்கை பார்ப்பவர்களே அதிகம். அதுபோல் கடற்கரைக்கு காற்று வாங்கப் போனால்கூட, எசகுபிசகாக ஜோடி தென்படுகிறதா, காலில் ஏதாவது பொருள் தட்டுப்படுமா என்று தேடுபவர்கள் ஏராளம். இதுபோன்ற விஷயங்கள்தான் மனதுக்கு இதமானது, இன்பம் தருவது என்பதால் இப்படித்தான் தேடுகிறது. இன்னும் சொல்லப்போனால் தீய எண்ணங்கள் மீதான ஆர்வம் மீண்டும் மீண்டும் வந்துகொண்டேதான் இருக்கும்.

### களைகளைக் களைதல்

ஒரு விவசாயி தன் மகனுடன் வயலுக்கு வந்தான். வயலின் ஒரு பகுதியில் களை மண்டிக்கிடந்தது. அதைப் பார்த்த மகன் தந்தையிடம் ஏன் அப்படிக் கிடக்கிறது என்று கேட்டான்.

‘மகனே… என்னால் சிறிய அளவுக்குத்தான் பயிரிட முடிகிறது. அதனால் அந்த பகுதியில் களை வளர்ந்துகிடக்கிறது’ என்று சொன்னான்.

‘நான் இந்தக் களைகளை அகற்றிவிடுகிறேன்…’ என்று சொன்னான் மகன்.

‘மீண்டும் இந்தக் களைகள் முளைத்துவிடுமே…’ என்று தந்தை சொன்னதும், ‘எத்தனை முறை முளைத்தாலும் களைகளை வெட்டிக்கொண்டே இருப்பேன்’ என்று மகன் வீரம் பேசினான்.

அதற்கு தந்தை, ‘மகனே களையை அழிப்பதற்கு அதனை வெட்டுவது சரியான வழியல்ல. அந்த இடத்தில் பயிர் விளைவிக்க வேண்டும். பயிர்கள் விளைந்துவிட்டால், களைகளுக்கு அங்கே வேலை இல்லை…’ என்று சொன்னார்.

அப்படித்தான் கெட்ட எண்ணங்கள், தீய சிந்தனைகள் மீண்டும் மீண்டும் தோன்றிக்கொண்டே இருப்பது இயல்புதான். மனதில் நல்ல எண்ணங்களை விதைத்தால் மட்டுமே கெட்ட எண்ணங்களை விரட்ட முடியும். வாழ்க்கையில் நல்ல சிந்தனைகளை கடைப்பிடித்து எளிமையாக வாழவேண்டும் என்பதை போதிப்பதற்கு இந்த உலகம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மதங்கள் இருக்கின்றன. ஆனால், அந்த மதத்தின் பேராலும் போர் நடத்தி கொலை செய்கிறான் மனிதன். ஏனென்றால், மதத்தையும் ஆயுதமாக மாற்றிவிட்டான் மனிதன்.

எதிர்மறையாக சிந்திப்பவர்களுக்கு எப்போதும் எதிர்மறைதான் பதிலாகக் கிடைக்கும். ஆழ் மனதில் தீய எண்ணம் கொண்டவர் என்றென்றும் வெற்றியை சுவைக்கவே முடியாது. நல்லது நினைத்தால் நல்லது நடக்கும், தீயது நினைத்தால் தீமையே விளையும் என்பதை வெற்றி மற்றும் தோல்வி அடைந்தவர் வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ள முடியும். ஆழ் மனம் இந்த சாதனையை செய்து முடிக்கிறது என்பது நிஜம்.


### இதனை எப்படி நம்புவது?

இந்த உலகில் நடக்கும் அனைத்து விஷயங்களையும் பகுத்து ஆராயும் அளவுக்கு மனித மூளைக்குத் திறன் இல்லை என்பது உண்மைதான். அதாவது, ஏன் நடக்கிறது என்று தெரியாமலே பல்வேறு விஷயங்கள் நம் வாழ்க்கையில் நடந்துகொண்டே இருப்பதுண்டு. திராவகம் குடித்து பிழைத்தவர் உண்டு, தண்ணீர் புரையேறி இறந்தவர் உண்டு. எறும்புகளைத் தின்னும் பல்லி, இறந்தபிறகு எறும்புகளுக்கே உணவாகிறது. தண்ணீருக்குள் இருக்கும் மீனால் பூமியில் மனித வாழ்க்கை எப்படியிருக்கும் என்பது பற்றியும், வானத்தில் இருக்கும் கோள்கள் பற்றியும் சிந்திக்கவே முடியாது. நிலா தேய்வதையும், வளர்வதையும் பார்க்கிறோம். ஆனால் அந்தக் காட்சிகள் உண்மை இல்லை. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று உலகை நான்கு திசையாகப் பிரித்துவைக்கிறோம். உருண்டுகொண்டிருக்கும் உருண்டையில் கிழக்கு, மேற்கு என எதுவும் கிடையாது. கண்களுக்குத் தெரியவில்லை என்பதால், காற்றில் கோடிக்கணக்கான உயிரிகள் இல்லை என்றாகாது.

இதையெல்லாம் விடுங்கள். தினமும் கண்ணாடியில் நம் முகத்தைப் பார்க்கிறோம். ஆனால், திட்டவட்டமாக நம் முகம் இப்படித்தான் இருக்கும் என்று தெளிவாக கண்ணை மூடி உருவகம் செய்வதற்கு யாராலும் முடியாது.

**மந்திரச்சொல்**

அதிர்ஷ்டம் என்பது உன் விடாமுயற்சிக்குக் கிடைத்த பரிசு.




### ஆழ் மனம் என்பது ஹார்டு டிஸ்க்

மனிதன் உடலை ஒரு கம்ப்யூட்டராக உருவகப் படுத்தினால், அதனை இயக்கத்திற்கு அத்தியாவசியமான ஹார்டு டிஸ்க் என்று ஆழ் மனதை சொல்லலாம். செலுத்தப்படும் அத்தனை தகவல்களையும் வாங்கி பத்திரப்படுத்திக்கொண்டு, தேவைப்படும் நேரத்தில் திருப்பிக் கொடுக்கும். நாம் ஹார்டு டிஸ்கில் என்ன செலுத்துகிறோமோ, அதுதான் நமக்குத் திரும்பவும் கிடைக்கும். நல்ல எண்ணங்கள், நல்ல சிந்தனைகள் ஆழ் மனதில் செலுத்தப்படுவதால், கிடைக்கும் விளைவுகளும் நல்லதாக இருக்கும். எதிர் மறை எண்ணங்கள் நிச்சயம் தோல்வி மனநிலையே தரும்.

ஆனால் ஒவ்வொருவரும் அவருக்குத் தேவையான ஆசைகளை ஆழ் மனம் மூலம் அடைந்துகொள்ள முடியும் என்பது மட்டும் நிரூபிக்கப்பட்ட உண்மை. புத்தர், விவேகானந்தர், தெரசா போன்றவர்கள் ஆழ் மனதில் வாழ்க்கையின் உண்மையைத் தேடி, விழிப்புணர்வு பெற்றார்கள். அதேபோல், தீவிரமாக தேடும் ஒவ்வொரு நபருக்கும் நிச்சயம் விடை கிடைக்கும். ஆழ் மனதை நம் இஷ்டப்படி ஆட்டுவிக்க அறிந்துகொண்டால் விரட்டிவரும் வறுமை, திணறடிக்கும் நோய், குறைந்துவரும் ஆனந்தம், கலங்கவைக்கும் தோல்வி, அதிர்ச்சியூட்டும் நஷ்டம் போன்ற அத்தனையிலும் இருந்து மீண்டுவிட முடியும்.

### ஆழ் மனதுக்கு மட்டும் இந்த வலிமை எப்படி வந்தது?

வீடு என்று பொதுவாக சொல்கிறோம். ஆனால் வரவேற்பறையில் யாரும் செல்வத்தை பாதுகாத்து வைப்பதில்லை. வரவேற்பறை என்பது நம்மைத் தேடிவரும் நண்பர்கள் மற்றும் தூரத்து உறவினர்களுக்கானது. ஹால், உணவறை, சமையலறை, விருந்தினர் அறைகளுக்கு நெருக்கமான உறவினர்கள், நண்பர்களை அனுமதிக்கிறோம். ஆனால், இங்கேயும் நம் செல்வத்தை பத்திரப்படுத்துவதில்லை.

நமக்கென பிரத்யேகமாக இருப்பது படுக்கையறை மற்றும் பூஜை அறை. இங்குதான் செல்வத்தை பாதுகாக்கிறோம். இங்கு நம் குடும்பத்தினரைத் தவிர வேறு எவருக்கும் அனுமதி கிடையாது. நமக்கு மட்டும்தான் வீட்டில் செல்வம் இருக்கிறதா… இல்லையா என்ற உண்மை தெரியும். அதனால் இந்த அறைதான் ஒரு குடும்பத்தின் நிஜம். அந்த வகையில் செல்வத்தைப் பாதுகாக்கும் அறை போன்று நமது ஆழ் மனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மற்ற அறைகள் எல்லாமே வெளி மனம் போன்றவை. செல்வம் எத்தனை இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் வீட்டின் வளர்ச்சி இருக்கும் என்பதுபோல், ஆழ் மனம் எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் மனிதனின் வெற்றியும் தோல்வியும் அமைகிறது.

இந்த ஆழ் மனதை பயன்படுத்தி வெற்றி அடைவது மிகவும் சுலபம். ஆம், எந்த நேரமும் நேர் மறை எண்ணம் மட்டும் ஆழ் மனதில் செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வளவுதான். கேட்பதற்கு மிகவும் எளிமையாகத் தெரிந்தாலும், குரங்கை நினைக்காமல் மருந்து குடிப்பது போன்று கொஞ்சம் கடினமான செயல்தான். ஆனால், எல்லோராலும் நிச்சயம் இதனை சாதிக்க முடியும். கண்களை மூடிக்கொண்டு பார்க்கவும், சத்தமே இல்லாத இடத்திலும் கேட்கவும் உதவி செய்வதுதான் ஆழ் மனம். இந்த ஆழ் மனதுக்கு நல்ல சிந்தனைகளே உரமாக இருக்கின்றன.

கோமேதகக் கல் மோதிரம் போட்டால் வெற்றி கிடைக்கும் என்று ஜோதிடர் சொன்னதை அப்படியே நம்பினான். உடனே கோமேதக மோதிரம் போட்டவனுக்கு பெண் கிடைத்து, திருமணமும் நடந்தது. இது எப்படி?

**- மனக்கண் திறக்கட்டும்.**



www.gyanaguru.com

# ஓய்வு எனும் சக்தி



ஒரு பெரிய நிறுவனத்தில் மிகப்பெரும் பொறுப்பில் இருக்கும் ராகவன் ஞானகுருவை தரிசிக்க வந்தான். கைகளில் மூன்று செல்போன்கள், இரண்டு பி.ஏ.க்கள், அவர்கள் கையில் ஃபைல்கள் என பார்க்கும்போதே, அவனுடைய பரபரப்பான வாழ்க்கை புரிந்தது.

‘‘எப்ப பார்த்தாலும் வேலை, மீட்டிங்னு பிஸியாவே இருக்கிறார். சாப்பிடுவது தூங்குவது எல்லாத்தையும் பெரிசா எடுத்துக்காம தினமும் 18 மணி நேரம் ஓடிக்கிட்டே இருக்கார். இவரோட கம்பெனி ஜெயிக்கிறதுக்கு ஆசிர்வாதம் பண்ணுங்க சாமி” என்று முன்வந்து பேசினாள், ராகவனின் மனைவி.

”உன் உழைப்பு அபாரமானது. ஆனால் வெற்றியை நீ காண்பதற்கு வாய்ப்பு குறைவுதான். ஏனென்றால், உழைப்பைவிட முக்கியமான ஒன்றை நீ தவற விடுகிறாய்” என்றார் ஞானகுரு. அவனுடன் வந்த அத்தனை பேரும் அதிர்ந்து நின்றார்கள்.

“நான் எதை தவறவிட்டேன்” தட்டுத்தடுமாறி கேட்டான் ராகவன்.

“ஓய்வை தவற விடுகிறாய் ராகவன். போட்டிகள் நிறைந்த இந்த உலகில், விரைந்து முடிவெடுக்கவும், செயல்படுவதற்கும் உழைப்பு மட்டும் போதாது, உடலும், மனமும் அதற்கு தயாராகவும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும். ஓடிக்கொண்டே இருப்பவன் கண்ணுக்கு அக்கம்பக்கத்தில் நடப்பது தெரியாது. அதனை ஓய்வில்தான் பார்க்க முடியும். ஓய்வு நேர சிந்தனையால்தான் புத்தம் புதிய வழிகள் திறக்கும்.

ஓய்வு கிடைக்காத உடலை எந்த நேரமும் நோய் தாக்கிவிடும். நோயாளியான கோடீஸ்வரரால், ஒரு ஆரோக்கியமான கூலித் தொழிலாளியின் சந்தோஷத்தைக்கூட அனுபவிக்க முடியாது.  எனவே வெற்றியை பிடிப்பதற்கு முன்பு உன், போதிய ஓய்வெடுத்து்கு உன் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள். அமைதியான சிந்தனை, ஆரோக்கிய உணவு, சீரான தூக்கம் மூன்றும் கிடைப்பதற்கு ஓய்வு தேவை.

நீ லட்சியத்தை செதுக்குவது போன்று உடல் ஆரோக்கியத்திலும் கவனம் வை. கார் பழுதானால் மட்டுமே பராமரிப்பது போன்று உடலையும் நோய் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று அசட்டையாக இராதே… அந்த நோய் உன்னை திரும்பமுடியாத பாதைக்கு கொண்டுபோய் விடலாம்…”

“ஓய்வு எடுத்தால் வெற்றி தாமதமாகிவிடாதா..?”

“வேகமாக ஓடத் தொடங்குவதால், ஓட்டப்போட்டியை வென்றுவிட முடியாது. சீரான வேகத்தில் ஓடுபவனே வெற்றியைத் தொடுவான்…” என்றதும் ஞானகுருவின் கையை ஆதரவாகப் பற்றிக்கொண்டான் ராகவன்.

’’சரியான நேரத்தில் எனக்கு கிடைத்த, சரியான ஆசிர்வாதம்” என்றான் அமைதியாக.


www.gyanaguru.com



# மரண கனவுகள்!

மயிலை கபாலீஸ்வரன் கோவில் சுற்றுப்பிரகார மண்டபத்தூண் ஒன்றில் முதுகைச் சாய்த்து கால்களை கால்நீட்டியபடி அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் ஞானகுரு. பக்தர்களில் எத்தனையெத்தனை வகை! குருக்கள் நீட்டும் தட்டில் தட்சணைக் காசு போடவும் வகையற்ற ஏழைகள். பட்டுவேட்டி சரசரக்க தோரணையாக வணங்கி நிற்கும் பெரிய தனக்காரர்கள், பயபக்தியுடன் மந்திரங்களை முணுமுணுப்பவர்கள், வேண்டுதலை நிறைவேற்றியதற்கு நன்றி சொல்லிவிட்டு கையோடு அடுத்த அப்ளிகேஷனைப் போட்டு வைப்பவர்கள், ஆசையை நிறைவேற்றினால் அள்ளிக் கொடுப்பதாக கடவுளுக்கே ஆசை காட்டுபவர்கள், ஏகாந்தமாக சுற்றித் திரிபவர்கள், கடவுளிடம் சண்டை போடுபவர்கள், பக்தர்களிடம் பிச்சை எடுப்பவர்கள், கடவுளை ஒரு கண்ணிலும் கட்டிளம் பெண்களை மறுகண்ணிலும் சேவிக்கும் ஆண்கள் என கோயில் களைகட்டியிருந்தது.

அழுதுகொண்டிருந்த இடுப்புக் குழந்தையை நச்சென கீழே உட்காரவைத்து, ஞானகுருவின் அருகில் அமர்ந்தாள் ஒரு பெண். இருபது வயதிருக்கும், உடுத்தியிருந்த ஆடையில் எளிமையும், ஏழ்மையும் தெரிந்தது. ஏற்கெனவே சோகத்தில் வந்தவளுக்கு இங்கு ஆறுதல் கிடைக்கவில்லை என்பது அவளது முகத்தில் தெரிந்தது. தாயின் சோகம் உணரா அந்தக் குழந்தை, சிணுங்கலுடன் தாயிடம் பால் குடிக்க தாவ... முதுகில் பட்டென்று ஒரு அடி வைத்தாள். அதை எதிர்பார்க்காத குழந்தை தாயைப் பாய்ந்து கட்டிக்கொண்டு ‘வீல்’ எனக் கத்தியது.

உடனே... அந்தக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தத் தொடங்கினாள். கண்களின் ஓரம் கண்ணீர் எட்டிப்

# மரண கனவுகள்!



பார்த்தது. குழந்தையை தோளில் போட்டு தட்டிக் கொடுத்தவள் தற்செயலாக திரும்பிப் பார்த்தாள்.

ஞானகுருவின் இனிப்பான புன்னகையே அவளை பேசவைக்க போதுமானதாக இருந்தது.

”சாமி... அம்பாள்கிட்ட இருந்து ஒரே ஒரு பூ குடுங்கன்னு பூசாரிகிட்டே கேட்டேன். அவர் தரவே இல்லை... யார் யாருக்கோ கிடைக்குது, எனக்கு அந்தக் கொடுப்பினைகூட இல்லை...'' என்று மேற்கொண்டு பேசப்போனவளை கையமர்த்தி தடுத்து, “தட்டில் எவ்வளவு தட்சணை போட்டாய்?” என்று கேட்டார்.

”2 ரூபாய் சாமி...” என்று கூச்சத்துடன் சொன்னாள்.

”அந்த காசுக்கு அவன் உனக்கு குங்குமம் கொடுத்ததே அதிகம்...” என்று சிரித்தார். அவளது ஏழ்மையைக் கிண்டல் செய்வதாக நினைத்து, முகம் சுருங்கி, கிட்டத்தட்ட அழும் நிலைக்கு அவள் வருவதை பார்த்ததும் ஆறுதலாக பேசத் தொடங்கினார்.

”பெண்ணே... நான் உன்னை குறை சொல்லவில்லை. பூசாரியின் தயவுகள் எல்லாம் பணத்தால் மட்டுமே அளக்கப்படுகிறது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். அதுசரி... அம்பாளின் பாதம்பட்ட பூ தேவைப்படும் அவசியம் என்ன..?”

அந்த கேள்வி அவளுக்கு நிம்மதி தந்திருக்க வேண்டும். மனதில் இருப்பதைக் கொட்டத் தொடங்கினாள், “சாமி... நான் ஒரு கனவு கண்டேன். என் தம்பிக்கு கல்யாணம் நடக்குது, அதுல செத்துப் போன எங்க அப்பா கலந்துக்கிறார். விருந்து சாப்பாடு தடபுடலா இருக்கு, நான் வைச்சதை எல்லாம் சாப்பிட்டுக்கிட்டே இருக்கேன். என் புள்ளைய யாரோ என்கிட்டே இருந்து வாங்கிட்டுப் போறாங்க, அதைக்கூட கண்டுக்காம சாப்பிடுறேன் சாமி...” என்றபடி கலங்கினாள்.

”அதனால் என்னம்மா...?”

”என்ன சாமி இப்படி சொல்றீங்க... கல்யாண கனவு கண்டா வீட்ல ஏதாவது சாவு நடக்கும்னு பெரியவங்க சொல்வாங்களே... ஊர்ல எங்க அம்மா மட்டும் தனியா இருக்குது. அதுக்கு ஏதாவது நடந்துடுமோ, இல்லைன்னா என் வீட்டுக்கார், குழந்தைக்கு ஏதும் ஆயிடு மோன்னு பயமா இருக்கு. அதான் சாமிகிட்ட பூ கிடைச்சா... கெட்டது விலகிடும்னு கோயிலுக்கு ஓடியாந்தேன். பூசாரி பூ குடுக்காம என்னை இன்னும் பயம் காட்டிட்டார். ஏதோ கெட்டது நடக்கப்போகுது...” என்றபடி கண்ணீர் சிந்தினாள்.

“உனக்கு ஏதாவது நடந்துடாதா..?”

''அப்படி நான் போயிட்டா பரவாயில்லை சாமி... வீட்டுக்காரர் பிள்ளை மேல உசுரா இருக்கார்... இன்னொரு கல்யாணம் முடிச்சிக்கிட்டாலும், பிள்ளையை நல்லா பாத்துக்கிடுவார்...” என்றவளின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தார்.

பெயர் அம்சவள்ளி. நெல்லையை அடுத்த சின்னஞ்சிறு கிராமத்தில் இருந்து சென்னைக்கு வந்திருக்கிறாள். இவளது தாய்வீடும், தூரத்து உறவினரான கணவன் குடும்பமும் விவசாய கூலிகள். வானம் பொய்த்து விவசாயம் இல்லாததால் சென்னைக்கு வரவேண்டிய நிலை. இப்போது கணவன் சொற்ப சம்பளத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறான். இவள் பத்தாவது வரை படித்திருக்கிறாள், மேலும் திருமணம் ஆனதும் குழந்தை பிறந்துவிட்டதால் வீட்டோடு இருக்கிறாள். ஒரே ஒரு அறை, அதிலேயே கிச்சன் தடுப்பு என்று இருக்கும் குட்டியூண்டு வீட்டில் வாடகைக்கு இருக்கிறாள். அந்த குடியிருப்பில் இருக்கும் ஆறு வீட்டிற்கும் சேர்த்து ஒரே பாத்ரூம், ஒரு டாய்லெட். தண்ணீர் எல்லாம் வாசலில் இருக்கும் குழாயில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இதெல்லாம் குறையாக எடுத்துக் கொள்ளாமல் வாழ்பவளை, நேற்றைய கனவுதான் புரட்டிப் போட்டிருக்கிறது. அத்தனை விஷயத்தையும் கொட்டியதில் கொஞ்சம் அசுவாசமடைந்திருந்தாள்.

”அம்சவள்ளி... கொஞ்சம் இரு...” என்று சொல்லிவிட்டு அருகே அனுமன் சிலைக்குப் போடப்பட்டிருந்த பூ மாலையை எடுத்துவந்து, கண்களை மூடி தியானித்து அவளிடம் கொடுத்ததும், பரவசத்துடன் வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

”அம்சவள்ளி... கனவு என்பது என்ன தெரியுமா?”

”நடக்கப்போறதை முன்கூட்டியே நமக்குச் சொல்றதுதான சாமி...”

”இல்லை அம்சவள்ளி. ஞாபகங்கள், நினைவுகள், பதிவுகள் என அன்றாடம் சேகரிக்கும் மூளை எனும் குப்பைத் தொட்டியில் இருந்து நிரம்பிவழிபவைதான் கனவுகள். அதனால் கனவில் நீ இறைவனைப் பார்த்தாலும் சரி, நரகத்தைப் பார்த்தாலும் சரி அதன்படி எதுவும் நிகழப் போவதில்லை. வாழ்விற்கும் கனவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை...”

”காலையில கண்ட கனவு பலிக்கும்னு சொல்வாங்களே சாமி..”

”எந்த நேரத்தில் பார்த்தால் என்ன, குப்பையை குப்பை என்றுதானே சொல்லவேண்டும்?”

அம்சவள்ளிக்கு அந்த பதிலில் முழுதிருப்தியில்லை என்பது அவள் முகத்தில் தெரிந்தது.

”சரி.. உன் வீட்டில் இருந்து கோயிலுக்கு வரும்வரை, தெரிந்தவர்கள் என்று எத்தனை நபர்களை சந்தித்தாய்..?”

”பக்கத்து வீட்டுக்காரம்மா மட்டும்தான் மார்க்கெட்டுக்குப் போயிட்டு வந்தாங்க, வேற யாரையும் பார்க்கலையே...” என்றாள்.

''நீ யாரையும் குறிப்பாக பார்க்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், உன் கண்கள் அப்படியல்ல. நீ வந்த தெரு, மனிதர்கள், கட்டடங்கள், நடந்துகொண்டிருந்த நிகழ்வுகள் என்று அனைத்தையும் கவனித்து உள்வாங்கி இருக்கும். இவை எதுவும் உனக்குத் தற்போது தேவையில்லை என்பதால், உன் நினைவுக்கு அதனை மூளை கொண்டுவருவது இல்லை. இதுபோலவே இதுவரை உன் வாழ்நாளில் நடந்த, கேட்ட, பார்த்த விஷயங்கள் மட்டுமின்றி உன் எண்ணங்கள், ஆசைகள், நிராசைகள், கோபங்கள், பயம், சந்தோஷம் அத்தனையையும் மூளை சேகரித்துக் கொண்டே இருக்கும். அதிகப்படியான குப்பை சேர்ந்தவுடன் தேவையற்றதை வெளியே தள்ளுவது போன்று மூளையும் அவ்வப்போது, தேவையற்ற சில நினைவுகளை உறக்கத்தில் கனவாக வெளியேற்றுகிறது. குப்பைகள் வெளியேறுவது வீட்டுக்கு சுகாதாரம்தானே தவிர, கவலைப்பட ஏதுமில்லை. கனவுகள் காணாத நபர் என்று எவருமே இல்லை, எல்லோருமே கனவுக்கு அர்த்தம் தேடத் தொடங்கி, அதனை நிஜ வாழ்வுடன் பொருத்திப் பார்க்கத் தொடங்கினால், நிகழ்காலத்தில் யாருமே சுகமாக வாழவே முடியாது...” என்றேன்.

அம்சவள்ளிக்கு அந்த பதிலிலும் அத்தனை திருப்தி இல்லை என்றாலும், அடுத்த ஒரு கேள்வியை ஆர்வமாகக் கேட்டாள். அது, அத்தனை மனிதர்களும் கேட்க விரும்பும் ஒரு கேள்வி.

, “சாமி... நாங்க பணக்காரங்களாகி சந்தோஷமா இருப்போமா? குறி சொல்லுங்க.... ஆனா உங்களுக்குத் தர காசு இல்லை” என்று கேட்டாள்.

”உனக்குப் பணம் வேண்டுமா..? சந்தோஷம் வேண்டுமா?”

.

பதில் சொல்லத்தெரியாமல் விழித்தவள், பின்னர் சமாளித்துக்கொண்டு, “பணம் இருந்தாத்தான சந்தோஷமா இருக்க முடியும்?” என்று சந்தேகம் கேட்டாள்.

“இல்லை அம்சவள்ளி... பணத்துக்கும் சந்தோஷத்துக்கும் துளியும் சந்பந்தம் இல்லை. இந்த உலகத்தை பணக்காரர்கள், ஏழைகள் என்று பிரிக்க முடியாது. சந்தோஷமாக இருப்பவர்கள்.... சந்தோஷம் இல்லாதவர்கள் என்றுதான் பிரிக்க முடியும். கோடிகோடியாகப் பணம் கொட்டிக் கிடந்தும் சந்தோஷம் இல்லாத மனிதர்கள் இருக்கிறார்கள். அதுபோலவே, அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழி தெரியாத நிலையிலும், கவலையின்றி சந்தோஷமாக இருக்கும் ஏழையும் உண்டு. நீ எந்த பிரிவில் சேர விரும்புகிறாயோ அது உனக்குக் கிடைக்கும். சென்று வா...” என்றவர் கையில் குழந்தையைக் கொடுத்தாள்.

உச்சிமுகர்ந்து மீண்டும் கொடுத்ததும் சந்தோஷமாகிப் போனாள்.


www.gyanaguru.com

# கோபத்தின் எதிரிகள்

“சின்னச்சின்ன விஷயங்களுக்கு எல்லாம் கோபப்படுகிறார். டீ சூடாக இருந்தாலும் கோபம், ஆறிவிட்டாலும் கோபம். இவரை சமாளிக்கவே முடியவில்லை. நான் என்னதான் செய்வது?” ரம்யா ஞானகுருவிடம் சரண் அடைந்தாள்.

‘‘நான் சரியாகவே இருக்கிறேன். சின்னச்சின்ன தவறுகள் என்றாலும் கோபம் வருகிறது, அவர்களை திருத்துவதற்காகவே கோவிக்கிறேன். இதில் என்ன தவறு?’’ பிரசன்னாவும் நியாயம் கேட்டான்.

“உனக்கு யாரெல்லாம் கோபம் உண்டாக்குகிறார்கள்..?”

‘‘என் மனைவி மட்டுமல்ல, குடும்பத்தில் மற்றவர்களும் அலுவலகத்தில் அனைவரும்தான். நான் கோபப்படுவேன் என்று தெரிந்தாலும் யாரும் மாறுவதே இல்லை. இவர்கள்தான் என்னை கோபப்படுத்துகிறார்கள்” என்றான் பிரசன்னா.

சிரித்தபடி தொடர்ந்தார் ஞானகுரு. “நன்றாக யோசித்துப் பார். நீ எதிர்பார்க்கும் ஒன்று கிடைக்காதபோது அல்லது நடக்காதபோதுதான் உனக்கு கோபம் வருகிறது. அதாவது, இந்த உலகத்தில் எல்லோருமே, எல்லாமுமே உன் விருப்பப்படி மட்டுமே நடக்கவேண்டும் என்று நினைக்கிறாய். உன்னுடைய கோபம் எதிரே இருப்பவர்களுக்கு காயத்தை உண்டாக்கும் என்பதைப்பற்றி நீ கவலைப்படுவதே இல்லை. ஆட்களே இல்லாத இடத்தில் நீ கோபமின்றி இருப்பாய் என்று நினைக்கிறாயா..? நிச்சயம் இருக்க மாட்டாய். ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து மனிதர்கள் இல்லையென்றாலும் எதன் மீதேனும் உன் கோபத்தைக் காட்டுவாய். இதெல்லாம் ஏன் தெரியுமா?

உனக்கு கோபத்தை வேறு யாரும் தூண்டுவது இல்லை. உன்னிடம்தான் கோபம் இருக்கிறது. அதைத்தான் நாள்தோறும் எல்லோரிடமும் விதைத்துக் கொண்டே இருக்கிறாய். கோபம் என்பது ஒரு மாயப்பிசாசு. நீ ஒவ்வொரு முறை கோபப்படும் நேரத்திலும் உன்னுடன் மேலும் மேலும் ஒட்டிக்கொள்ளும். பொறுமையும் புன்னகையும் மாயப்பிசாசின் எதிரிகள். நீ பிறரிடம் பொறுமையைக் கடைப்பிடிக்கும் நேரத்திலும், புன்னகைக்கும் நேரத்திலும் அந்த மாயப் பிசாசு உன்னிடம் இருந்து விலகிவிலகி செல்லும்.

இன்னொரு உண்மை தெரியுமா? அந்த மாயப்பிசாசு உன்னை நெருங்கும் ஒவ்வொரு கணமும் உன் ஆயுளில் ஒரு நாள் குறைந்துகொண்டே இருக்கும். அதாவது உன் ஒவ்வொரு கோபமும் உன் ஆயுளில் ஒரு நாளைக் குறைக்கும். இது மருத்துவ ரீதியிலும் உண்மை என்பதை உன் மருத்துவரிடம் கேட்டு தெரிந்துகொள்.

நீ கோபப்படாமல் பேசுவதால் எதையும் இழந்துவிட மாட்டாய். ‘அடேங்கப்பா… சூரியனையே ஒரு டம்ளரில் கொண்டுவந்துவிட்டாயே?’ என்று மிகச்சூடாக உன் மனைவி காபி கொண்டுவரும் போது புன்னகைத்துப் பழகு. அவளுக்கும் வெட்கம் வரும். சந்தோஷம் வரும். உனக்கு நீ நினைத்த மாதிரி காபியும் வரும்.

இனியும் நீ மாயப்பிசாசுடன் வாழத்தான் போகிறாயா?” என்று கேட்டார் ஞானகுரு.

அதிசயமாக புன்னகைத்தான் பிரசன்னா.




www.gyanaguru.com

# ஞானகுரு பதில்கள்


**?பெண்களுக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தை தவறாக சிலர் பயன்படுத்துகிறார்களே..?**

**- கோ.அரங்கநாதன், செம்மண் காலாண்டிதழ்.**

**ஞானகுரு :**

பெண்ணுக்கு சுதந்திரம் கொடுக்கும் அதிகாரத்தை உனக்கு யார் தந்தது..? பெண்ணுக்கு சுதந்திரம் அளிப்பதாக நினைப்பதும், அவளை கட்டுப்படுத்த துடிப்பதும் ஆண்மைத் திமிர். அதை அவளிடம் காட்டாதே. ஆணுக்கு இருக்கும் அத்தனை திமிரும், பொறுக்கித்தனமும் பெண்ணிடமும் உண்டு, ஜாக்கிரதை.





**?மன பலம், உடல் பலம் எது சிறந்தது?**

**- எஸ்.சரவணன், காரைக்கால்**

**ஞானகுரு :**

யானைக்கு உடல் பலம் அதிகம். ஆனால் அந்த யானையை ஒரு சின்ன சங்கிலியில் கட்டிப் போடுகிறான் மனிதன். ஒரு சிறிய அங்குசத்தைக் காட்டி யானையை பிச்சை எடுக்க வைக்கிறான். மனதில் பலம் இல்லையென்றால் உடல் பலமாக இருந்து எந்த பிரயோஜனமும் இல்லையே...

**?பயத்தை எதிர்கொள்வது எப்படி?**

**- எஸ்.சகுந்தலா, சாத்தூர்.**

**ஞானகுரு : .**

ஓர் அறையில் இருந்து கெட்ட வாடை வருகிறது என்றால், உள்ளே என்ன கிடக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அதனை அப்புறப்படுத்தினால் மட்டுமே துர்வாடை நிரந்தரமாக தீரும். அதைவிட்டு அறைக்குள் நறுமணத்தை திணிப்பது வீண். எனவே, மனதில் பயம் ஏன் வருகிறது, எதற்காக வருகிறது என்று ஆய்வு செய்வதுதான், அதனை எதிர்கொள்ளும் முதல் வழி. சின்ன வயதில் இருந்தே பிள்ளைகளுக்கு பூச்சாண்டி காட்டி பயத்தை உருவாக்குகிறோம். சரியாக படிக்காத மாணவனுக்கு பரிட்சையைக் கண்டும், ஆசிரியரைக் கண்டும் பயம் வரும். திறமை இல்லாத ஊழியனுக்கு உயர் அதிகாரிகளைக் கண்டு பயம் வரும். சட்டத்திற்கு புறம்பான காரியம் செய்பவருக்கு காவலர்களை கண்டாலே பயம் வரும். அதுபோல், உனக்கு ஏன்



பயன் வருகிறது என்பதற்கான காரணத்தைக் கண்டுபிடி... காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டால், அதனை சரி செய்யவும் உன்னாலே முடியும்.

www.gyanaguru.com



**?கணவன் – மனைவி கருத்துவேறுபாடுகளைக் களைவது எப்படி?**

**- பி.மருதுபாண்டி, ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**ஞானகுரு :**

நூறு சதவிகிதம் ஒற்றுமையான தம்பதி, ஆதர்ச தம்பதி, லட்சியத் தம்பதி என இந்த உலகில் யாருமே இல்லை என்பதை புரிந்துகொள்வதுதான் முதல் படி. இருவர் என்றாலே தனித்தனி கருத்துக்கள், சிந்தனைகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் இருக்கத்தான் செய்யும். இதனை இருவரும் ஏற்றுக்கொண்டு, தங்கள் கடமைகள், உரிமைகளின் எல்லை எதுவரை பேசிக்கொண்டாலே பெரும்பாலான பிரச்னைகள் எட்டிப் பார்க்காது. மனைவி யின் உறவினர்கள் வந்தால் கவனிப்பது கணவனாகவும், கணவன் வீட்டு உறவினர்களை கவனிப்பது மனைவியாகவும் இருத்தல் வேண்டும். சமையல் முதல் தொலைக்காட்சி வரை யாருக்கு எதில் முன்னுரிமை என்பதைவிட், விட்டுக்கொடுக்கும் தன்மையில் தெளிவு வேண்டும். யாருமே இல்லாத தனித்தீவில் கணவன், மனைவி மட்டும் மாட்டிக் கொண்டால்.... ஒருவருக் கொருவர் அனுசரணையாக இருந்தே தீரவேண்டிய கட்டாயம் நிகழ்ந்துவிடும். அப்படியொரு சூழலாக இந்த உலகையும் எண்ணிக்கொள். கருத்துவேறுபாடுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்தலாம், முற்றிலும் நீக்க முடியாது, நீக்கவும் வேண்டாம். நிறை, குறைகளை ஏற்றுக் கொண்டும், விட்டுக்கொடுத்தும் வாழ்வதுதான் நல்ல வாழ்வு. இதன் அர்த்தம் அடிமையாக வாழ்வது அல்ல.



**?குழந்தைகளுக்கு செல்லம் கொடுக்கலாமா?**

**- டி.மணிபாரதி, கும்பகோணம்.**

**ஞானகுரு :**

அதிக செல்லம் கொடுப்பது அடம் பிடித்தலை உருவாக்கும். தான் மட்டுமே முக்கியம், ஸ்பெஷல் என்ற குணம் குழந்தையிடம் உருவாகும். நாளை போட்டி நிறைந்த உலகை ஜெயிப்பதற்கு குழந்தைக்கு அதிக மன பலம் தேவை. அதற்கு நீ கொடுக்கும் அதீத அன்பு தடையாகத்தான் இருக்கும். எனவே, ஒரு செடி வளர எவ்வளவு தேவையோ, அந்த அளவுக்கு மட்டும் தண்ணீர் விடு. அதிகம் என்றால் அழுகிவிடும் செடி.





**?பயணங்கள் மாற்றம் தருமா?**

**- வி.சந்தானம், பனங்குடி.**

**ஞானகுரு :**

மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனம் இல்லை என்றால் காஷ்மீர் பனி மலைக்குச் சென்றாலும் ஆனந்தம் கிடைக்காது. முதலில் சின்னச்சின்ன மாற்றங்களை ரசிக்கக் கற்றுக்கொள். உன் கட்டிலில் தலை மாற்றி படுத்தால்கூட சுகத்தை உணரும் நிலைக்கு வா... பயணம் உன்னில் மாபெரும் புரட்சியே உருவாக்கும்.

**?கோயில்களுக்குச் செல்லும்போது மனம் அமைதியடைகிறதே... இது கடவுளின் மகிமைதானே..?**

**- பி.வாணி பத்மநாபன், வத்றாப்.**

**ஞானகுரு :**

அப்படியென்றால் கோயிலில் மட்டும்தான் கடவுள் இருக்கிறாரா? கோயிலுக்கு வரும் மனிதன் மனதை சாந்தியடைய வைப்பதுதான் கடவுளின் வேலையா? எல்லா மனிதர்களுக்கும் அப்படித்தான் நடக்கிறதா... கேள்வி கேள், பதில் கிடைத்துவிடும்.



www.gyanaguru.com

**? பழி வாங்கும் குணத்தை மாற்றுவது எப்படி?**

- பி.வனிதா, சென்னை.

**ஞானகுரு :**

நீ பூமியைத் தோண்டும்போதும் பூமாதேவி உன்னை வாழ்த்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய். உன் கோபத்தை உறவினர் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறாய். ஆனால் பிறர் இழைத்த தீமைக்கு மட்டும் பழி வாங்க ஆசைப்படுகிறாய். இந்த உலகில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஏதேனும் எதிர்வினை இருக்கவே செய்யும். அதனை புரிந்துகொள்ளும் பக்குவம், திறன், புத்தி மனிதனுக்கு இல்லை என்பதுதான் உண்மை. பழி வாங்கும் எண்ணம் தீயைப் போன்றது. குடிசையை பற்ற வைக்க தீக்குச்சி பற்றவைத்தால், முதலில் அழியப்போவது தீக்குச்சிதான். மன்னிப்பதுதான் ஒருவருக்கு நீ தரும் மிகப்பெரும் தண்டனை. அதனை கொடு.





**? தர்மம் செய்வதில் இன்று கர்ணன் போல வாழ்வதா அல்லது தர்மர் போல் வாழ்வதா?**

- எஸ்.கண்ணன், புதுவை.

**ஞானகுரு :**

நாட்டு சொத்தை எடுத்து தானம் செய்வது என்றால் நீ கர்ணனாக இருந்தாலும், தர்மனாக இருந்தாலும் சரிதான். உழைத்து சம்பாதித்த பணத்தை தானம் செய்வதாக இருந்தால், நிதானமாக யோசி. உதவி கேட்பவர்களுக்கு உன்னால் முடிந்ததை செய். இதனால் புண்ணியம் கிடைக்குமா அல்லது உதவி திரும்பக் கிடைக்குமா என்று ஒருபோதும் யோசிக்காதே. கோயிலுக்கும் கடவுளுக்கும் தர்மம் செய்வது மகா பாதகம். கடவுளுக்கு பிச்சை போடும் அளவுக்கு நீ பெரியவன் அல்ல.

**? துன்பம் வரும் வேளையில் சிரிக்கச் சொல்கிறார்களே, அது சாத்தியமா?**

- பி.மதிவாணன், குலக்கரை மேடு.

**ஞானகுரு :**

ஏதோ ஒரு நாட்டில் நடந்த விமான விபத்தில் 80 பேர் பலி என்ற செய்தியை, தேநீர் அருந்தியபடி எந்த சலனமும் இல்லாமல் உன்னால் படிக்க முடியும். இது ஏன் என்று யோசித்துப் பார்த்திருக்கிறாயா?

அவர்களுக்கும் உனக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அதனால் அவர்களுடைய மரணம் உன்னை பாதிக்கவில்லை. முகம் தெரியாத மூன்றாம் மனிதர்கள் போன்று உன்னுடைய உறவுகளையும், சொந்தத்தையும், நண்பர்களையும் தள்ளி வைப்பதுதான் உண்மையான துறவு நிலை. இந்த நிலையைத்தான் ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டும்.

வாழ்க்கையில் துன்பம், இன்பம் என எதுவுமே நிஜம் இல்லை, நிலைத்திருக்கப் போவதும் இல்லை. இந்த உண்மை புரியாமல்தான் துன்பம் வந்ததும் மக்கள் அழுது புலம்புகிறார்கள். இந்த துன்பம் நிலைத்து நிற்கக்கூடியது இல்லை என்று புரியாமல் அழுது புலம்பும் மனிதர்களைப் பார்த்துத்தான் சிரிக்கச் சொல்கிறார் திருவள்ளுவர். சிரித்துப் பழகு.








# ஞானகுரு பதில்கள்

**? காதல் திருமணங்களும் நிலைப்பதில்லையே… ஏன்?**

- டி.சகுந்தலா, அருப்புக்கோட்டை

**ஞானகுரு :**

வேட்டை நாயைப் போன்றவன் ஆண். தன்னுடைய ஆசைக்காக காதல் வலை வீசி பெண்ணை பிடிக்கிறான். திருமணம் முடியும் வரையிலும் சொன்னதைக் கேட்கும் நாய்க்குட்டி போன்று தலையாட்டுகிறான். திருமணம் முடிந்ததும் பொய்மையில் இருந்து வெளியேறி, தன் நிஜ முகத்தைக் காட்டுகிறான். அதனை தாங்கிக்கொள்ளும் சக்தி பல பெண்களிடம் இருப்பதில்லை. மேலும் இன்று பொருளாதார ரீதியில் எவரையும் சார்ந்திருக்கத் தேவை இல்லாத நிலையை பெண் அடைந்துவிட்டதால், சட்டென பந்தத்தை உதறி வெளியேறி விடுகிறாள். மிக குறைவான எண்ணிக்கையில் பெண்களும் நயவஞ்சகமாக ஆண்களை மயக்கி திருமணம் வரை கொண்டுசெல்கிறார்கள். ஆசை வலையில் விழுந்தவன் மயக்கம் தீர்ந்ததும் தப்பித்து ஓடுகிறான். குறிப்பாக எதிர்பாராத ஏமாற்றங்களே திருமண முறிவுக்குக் காரணமாகிறது. தன்னைவிட, தான் விரும்புபவர் நன்றாக இருக்கவேண்டும் என விரும்பும் காதலர்கள் தம்பதிகளாக மாறும்போது, அங்கே தோல்விக்கு இடமே இல்லை.



**? சுயநலத்தில் இருந்து பொதுநலத்திற்கு மாற முடியுமா?**

- ஏ.கருப்பையா, போடிநாயக்கனூர்.

**ஞானகுரு :**

கடவுள் மனிதனாகப் பிறந்து வந்தால்கூட, சுயநலத் துக்குத்தான் முன்னுரிமை கொடுப்பார். அதனால் சுயநலம் என்பது தவறு கிடையாது. சுயநலத் தேவைகள் நிறைவேறியதும் பொதுநலத்திற்கு மாறுவது நல்ல மனிதனுக்கு அறிகுறி. ஆனால், தன் சுயநலத் தேவைகள் நிறைவேறியதுகூட தெரியாமல் மனிதன் கடைசி மூச்சு வரை, தனக்காகவே பரிதாபமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறான். ஒரே ஒரு கணம், இனியும் எனக்கு இதெல்லாம் தேவையா என்று கேட்டுக்கொண்டால், சுயநலச் சேற்றில் இருந்து மீண்டுவிட முடியும்.





**? ஏட்டுக் கல்வி சிறந்ததா.. அனுபவக் கல்வி சிறந்ததா?**

- எம்.தேவகி, குன்றத்தூர்.

**ஞானகுரு :**

இந்த உலகின் டாப் 10 பணக்காரர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்கள், விஞ்ஞானிகள் எவருமே பாடம் படித்து முன்னுக்கு வந்தவர்கள் அல்ல. ஆனால் அவர்களிடம் பணியாற்றுவதற்கும், அவர்களை மேலும் மேலும் உயர்த்துவதற்கும் ஏட்டுக் கல்வி முடித்தவர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள்.

? வயதானவர்கள் கோயிலுக்கு அதிகமாக செல்வது ஏன்?

– ஏ.முனீஸ்வரி, திருச்சி.

**ஞானகுரு :**

வீட்டிலும், வெளியிலும் தன்னுடைய பேச்சு எடுபடாதபோது, தான் சொல்வதை பிறர் கேட்காமல் நடக்கும்போது மனிதன் கோயிலுக்குச் செல்லத் தொடங்குகிறான். தான் சொல்வதை ஆண்டவனாவது மறுப்பு சொல்லாமல் கேட்பான் என்ற நம்பிக்கையில்தான் கோயிலுக்குப் போகிறான். ஆனால், அந்த நம்பிக்கையும் போலிதான். ஒரு கட்டத்தில் வேடிக்கை பார்ப்பது மட்டும்தான் வாழ்க்கை என்பதை உணர்ந்துகொள்வதுதான், நிம்மதி தரும்.




# ஞானகுரு பதில்கள்

? உண்மை, நேர்மை, உழைப்பு, ஒழுக்கம் இவற்றுக்கு உரிய அங்கீகாரம் எப்போது கிடைக்கும்?

– கோ.அரங்கநாதன், சென்னை.

**ஞானகுரு :**

அங்கீகாரம் பிறரிடம் இருந்து கிடைக்க வேண்டும் என்பதற்காக நேர்மையாக இருப்பது முட்டாள்தனம். உன் நேர்மையைப் பார்த்து பிறர் கிண்டல் செய்வதுதான் உண்மையான அங்கீகாரம். உன் ஒழுக்கத்தை அவமரியாதை செய்வதும், உன் உழைப்பை புறக்கணிப்பதும் அங்கீகாரம்தான். இதுதவிர உன்னை பாராட்டி, வானத்தில் இருந்து தேவர்கள் பூமழை பொழிவார்கள் என்று எதிர்பார்க்காதே, ஏமாந்து போவாய். நேர்மையும் உண்மையும் உனக்கு ஆனந்தம் தருகிறது என்றால் மட்டும் நேர்மையாக இரு, இல்லையென்றால் நீயும் கெட்டுப் போ.





? ஊழல் செய்வதற்குக் காரணம் பணமா, புகழ் மோகமா?

– எஸ்.கற்பகம், ராம்நாட்.

**ஞானகுரு :**

ஆணவம்தான் காரணம். நான் செய்யும் ஊழலை யாராலும் கண்டுபிடிக்க முடியாது, அப்படியே கண்டுபிடித்தாலும் நிலைமையை என்னால் சமாளித்துவிட முடியும் என்ற அகங்காரம்தான் தைரியம் கொடுக்கிறது. அதனால்தான் ஊழல் குற்றவாளிகள் போலீஸ் வாகனத்தில் ஏறும்போது, ஒலிம்பிக் வெற்றியாளர்கள் போன்று சந்தோஷமாக கையாட்டிக் கொண்டே போகிறார்கள்.







## கவித்துவம்

அம்மா என்றால்
ஒரு அம்மாதான்.
உன் அம்மா...
என் அம்மா
தனித்தனி அம்மாக்கள்
கிடையாது.

– லா.ச.ரா.



# இதயம் பேசுமா?

“மூளை சொல்வதைக் கேட்பதா அல்லது இதயம் சொல்வதைக் கேட்பதா என்பது குழப்பாக இருக்கிறது என்று ஒரு கேள்வியை எழுப்பினான் மகேந்திரன்.

“புரியவில்லையே..?” ஞானகுரு குறும்பாகக் கேட்டார்.

‘‘அதாவது எந்த ஒரு முடிவு எடுப்பதாக இருந்தாலும் இதயம் ஒன்று சொல்கிறது, மூளை வேறு ஒன்றை சொல்கிறது. நான் எதை கேட்பது என்று புரியவே இல்லை…”

‘‘சரி, அதேபோன்று ஏதேனும் ஒரு முடிவு எடுக்கும்போது உன்னுடைய நுரையீரல் என்ன சொல்கிறது, உன் சிறுநீரகம் என்ன சொல்கிறது என்பதையும் கேட்டுப் பாரேன்…”

‘‘கிண்டல் செய்யாதீர்கள் சாமி, இதயம்தானே மனதின் இருப்பிடம். அதனால்தானே நெஞ்சைத் தொட்டு சொல்கிறோம்..”

சிரித்தபடி தொடர்ந்தார் ஞானகுரு. ‘‘மகேந்திரா… மனித உடலில் உள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் அதனதன் பணிகளை மட்டுமே செய்கின்றன. இதயத்தின் வேலை அசுத்த ரத்தத்தை சுத்திகரித்து மீண்டும் உடலுக்குச் செலுத்துவதுதான். அதைத் தவிர வேறு எதுவும் அதற்குத் தெரியாது. அதனால் இதயம் என்பது மனம் அல்ல அது ஓர் உறுப்பு”

‘‘என்ன சாமி இப்படி சொல்றீங்க… மனம் என்றதுமே இயல்பாக கை நெஞ்சுக்குத்தானே போகிறது..?”

www.gyanaguru.com

www.gyanaguru.com

அதேநேரம் மனம் என்பது வளரக்கூடியது. அதாவது, சிறியவர்களைவிட முதியவர்கள் மன முதிர்ச்சியுடன் செயல்படுவதுண்டு. அதற்கு காரணம், ஞாபகங்களின் அதிகமான சேமிப்புதான். இதையே அனுபவம் என்றும் சொல்கிறோம்.



## மந்திரச்சொல்

அழகை அனுபவிக்க
சுற்றுலாவை தேர்ந்தெடுக்காதே,
உன்னை சுற்றிலும் தேடிப் பார்.

“சரிதான்.. திடீரென உன் இதயம் பழுதாகிவிட்டது என்று செயற்கை இதயம் வைப்பதாக நினைத்துக்கொள். உன்னிடம் இதயம் இல்லை என்பதால், அதன்பிறகு நீ சிந்திக்க மாட்டாயா..? இதயவலி ஏற்படும்போது உன்னுடைய சிந்தனைகளும் நின்றுவிடுமா? அதனால் தான் சொல்கிறேன். இதயத்துக்கு எதுவுமே தெரியாது.

உன்னை ஏதாவது ஒரு முடிவு எடுக்கச் சொல்லி தூண்டுவதும், அந்த முடிவு தவறாக அமைவதற்கு வாய்ப்பு உண்டு என்று எச்சரிக்கை செய்து தடுப்பதும் உன்னுடைய எண்ணங்கள்தான். அந்த எண்ணங்களின் தொகுப்புதான் மனம்...”

“சாமி, மனம் என்பது இதயத்தில் இல்லை என்று நீங்கள் சொல்வது ஏற்கும்படியாகவே இருக்கிறது. மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பு என்று சொன்னீர்கள். எண்ணங்கள் மூளையில்தான் தொடங்குகிறது என்பதால், மூளைதான் மனம். சரிதானே..?” பள்ளி மாணவன் போன்று கேள்வி கேட்டான் மகேந்திரன்.

”ஒரு விமானத்தை இயக்கும் பைலட் போன்று மனித உடலை இயக்கும் சூட்சும டிரைவர்தான் மூளை. உடலில் உள்ள கை, கால், இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற அனைத்து அவயங்களையும் ஒருங்கிணைக்கும் பணியை மூளை திறம்பட செய்கிறது. அதோடு, ஞாபகங்களை எல்லாம் சேமித்து வைக்கிறது. அந்த ஞாபகக் கிடங்கில் இருந்து எண்ணங்களையும் மூளையே உருவாக்குகிறது. அப்படிப்பட்ட எண்ணங்களின் தொகுப்பையே மனம் என்கிறோம்.

மூளையால் உருவாக்கப்பட்டது என்றாலும், அந்த எண்ணங்கள் தனித்து இயங்கக்கூடியவை. இதனை ஒரு திடப்பொருளாக அல்லது உடலின் அவயமாக கற்பனை செய்ய முடியாது. விபத்தில் மூளை பாதிக்கப்படும் நேரத்தில் மனமும் பாதிக்கப்படுவது நிஜம். ஆனாலும் மனநோயாளிகளின் எண்ணங்கள் வேறு ஏதோ ஒரு வகையில் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. அதனால் மூளையையும் மனம் என்று சுட்டிக்காட்ட முடியாது.

அதேநேரம் மனம் என்பது வளரக்கூடியது. அதாவது, சிறியவர்களைவிட முதியவர்கள் மன முதிர்ச்சியுடன் செயல்படுவதுண்டு. அதற்கு காரணம், ஞாபகங்களின் அதிகமான சேமிப்புதான். இதையே அனுபவம் என்றும் சொல்கிறோம்.

காலையில் படுக்கையில் கூடுதலாக கொஞ்ச நேரம் தூங்கச் சொல்லி கெஞ்சுவதும் உன் மனம்தான். இப்படி தூங்கினால், குறிப்பிட்ட நேரத்திற்கு அலுவலகம் செல்லமுடியாமல் மேல் அதிகாரியிடம் திட்டு வாங்க நேரிடும் என்று உன்னை எச்சரிக்கை செய்வதும் மனம்தான்.

இந்த இரண்டில் இருந்து ஏதேனும் ஒரு முடிவை நீதான் எடுக்கவேண்டும். மேலதிகாரியிடம் ஏதேனும் பொய் சொல்லி சமாளிக்க முடியும் என்று உன்னை சமாதானப்படுத்தி தூங்க வைப்பதும் உன் மனம்தான். இன்னும் கொஞ்சநேரம் தூங்கினால் வேலை போய்விடும் என்று பயம் காட்டி உன்னை உடனே எழுப்பிவிடுவதும் உன் மனம்தான்...”

மனம் பற்றிய தகவல்களைக் கேட்டு வியந்து நின்றான் மகேந்திரன்.

www.gyanaguru.com



# உடல்

## கடவுளா... கழுதையா..?




ஆதர்ச தம்பதியர் போன்று வந்து சேர்ந்தனர் பாண்டியனும்–தர்ஷினியும். ஞானகுருவிடம்,. “சாமி, இவர் ரொம்பவும் நல்லவர். ஆனா, உடலைப் பத்தி கண்டுகொள்ளாமல் அதிகம் சாப்பிடுகிறார், அதிகம் உழைக்கிறார். கேட்டால், ’என் உடம்பைப் பற்றி எனக்குத் தெரியும்’ என்கிறார். அவர் சொல்வது உண்மைதானா?” என்று கேட்டாள்.

பாண்டியன் கையைப் பிடித்துகொண்ட ஞானகுரு, ‘’உன் உடல் பற்றி உனக்கு தெரிந்ததை சொல்லேன்..?” என்று கேட்டதும், ‘’நான் என்ன சாப்பிட்டாலும் செரித்துவிடுகிறது. எத்தனை வேலை செய்தாலும் டயர்ட் ஆவதில்லை. என் உடல் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது, அது போதாதா...? அதனால்தான் தேவையில்லாத கட்டுப்பாடுகள் விதித்துக்கொள்வதில்லை’ என்று சொன்னான்.

புன்னகையுடன் பேசத் தொடங்கினார் ஞானகுரு. ‘’பாண்டியா.. ஒரு வாகனம் 100 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது என்பதற்காக... நீ அந்த வேகத்தில் செல்ல முடியாது, செல்லவும் கூடாது. அப்படித்தான் உன் உடலும். உனக்கு விசுவாசமாக இருக்கிறது என்பதற்காக அதற்கு அதிக சுமையைக் கொடுக்காதே. இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் முதலில் நேசிக்க வேண்டியது அவன் உடம்பைத்தான். ஆம், அதுதான் அவன் வாழ்க்கைக்கு ஆதாரம். அதுதான் அவனுடைய வாழ்க்கை.

ஆனால், மனிதர்கள் பசிக்கும்போதும், நோயின் போதும், பாலியல் தேவையின்போதும் மட்டுமே உடலை கண்டுகொள்கிறார்கள். இந்த மூன்றையும் கொடுத்துவிட்டால் உடல் அமைதியாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல பாண்டியா... உடலுக்குத் தேவை, மரியாதை.

ஒரு கோயிலுக்கு நீ எத்தனை மதிப்பு கொடுக்கிறாயோ அதே மரியாதையை உடலுக்கும் கொடுக்க வேண்டும். திருப்பள்ளியெழுச்சி எனப்படும் சுப்ரபாதம் மூலம் இறைவனை துயில் எழுப்பி பூஜை, புனஸ்காரங்கள் செய்து பின்னர் சயன அறையில் தூங்கச் செய்வது போல் உன் உடலுக்கும் மதிப்பும் மரியாதையும் செய். அப்போதுதான் உடலும் உனக்கு கடவுளைப் போன்று கருணை காட்டும்.

நீ உன் உடலை ஒரு கழுதையைப் போன்று நினைத்து பொதியை மட்டும் ஏற்றிக்கொண்டே சென்றால், உன்னை உதைத்துவிட்டு ஓடியே போய்விடும். உன் உடலின் அற்புதத்தை உணராமலே போய்விடுவாய். இப்போது சொல்.. உன் உடல் கழுதையா அல்லது கடவுளா?” என்று கேட்டார்.

”இனி நான் கடவுள்” என்று ஆனந்தமானான்.

www.gyanaguru.com

# மாமியார் என்றால் பூதமா..?



நந்தினி திருமணத்திற்கு ஆறு மாதங்கள் இருக்கும்போதே ஒரு பியூட்டி பார்லருக்குப் போய் தன்னுடைய தோல் மற்றும் கூந்தலின் தன்மையைக் காட்டி எப்படிப்பட்ட மேக்கப் சரியாக இருக்கும் என்று ஆலோசனை செய்தாள். திருமண மேடையில் பிரகாசமாக தெரிவதற்கு இப்போதே அழகு சிகிச்சை தொடங்கவேண்டும், விதவிதமான ஹேர்ஸ்டைல் போட்டுப் பார்த்து, முகத்துக்கு பொருத்தமானதை தேர்வு செய்யவேண்டும் என்று அழகுக்கலை நிபுணர் சொன்னதை, வேதவாக்காக எடுத்துக்கொண்டு செலவு செய்யத் தொடங்கினாள். முகத்துக்குப் போடும் க்ரீம் தொடங்கி நகப்பாலீஷ் வரையிலும் அழகு நிலையத்தினர் சொன்னதற்கு அப்படியே தலையாட்டினாள்.

இதுபோல் ஆடை அலங்காரம், இன்விடேஷன் என ஒவ்வொன்றையும் பார்த்துப்பார்த்து அக்கறையுடன் செய்தாள். நண்பர்கள், உறவினர்கள் யாரும் விடுபடக்கூடாது என நினைவுகளை தோண்டியெடுத்து அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பிவைத்தாள். பெரியோர்கள் ஏற்பாடு செய்த திருமணம் என்பதால் ஜாம்ஜாமென்று நடந்தது. உள்ளூர் சம்பந்தம் என்பதால் சம்பிரதாயங்கள் முடிந்து மாமியார் வீட்டுக்குப் போனாள் நந்தினி. வசதி, வாய்ப்புகளோடு வந்தவள் என்பதால் கணவன் பிரகாஷ், நந்தினியை அன்போடு நேசித்தான்.

மாமனார் இல்லாத குடும்பம், மாமியார் சகுந்தலா கையில்தான் வீட்டுப் பொறுப்பு இருந்தது. சமையல் முதற்கொண்டு எல்லா வற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன், நீ பிரகாஷை மட்டும் அன்போடு கவனித்துக் கொண்டால் போதும் என்று மாமியார் சொன்னதும் சந்தோஷமாகிவிட்டாள் நந்தினி. ஒரு மாதம் நல்லபடியாகத்தான் போனது.

பிரகாஷ் வேலைக்கு செல்லத் தொடங்கியதும்

www.gyanaguru.com

சின்னச் சின்னதாக பிரச்னைகள் ஆரம்பமானது. பிரகாஷ் ஆபிஸ்போனதும் தனது அறைக்குள் முடங்கிக் கொள்வது நந்தினியின் வழக்கம். தோழிகளுக்கும் உறவினர்களுக்கும் போனில் அரட்டை அடித்து, ஃபேஸ்புக், ட்விட்டர்களை நோண்டிவிட்டு மதியம் சாப்பிடத்தான் கீழே இறங்குவாள். மாமியாருடன் கொஞ்சநேரம் பேசிவிட்டு மீண்டும் மேலே போய்விடுவாள். ஆனால் அன்று கீழே இறங்கியபோது வழக்கத்திற்கு மாறாக சகுந்தலா கட்டிலில் படுத்துக் கிடப்பதைப் பார்த்து என்னவென்று விசாரித்தாள்.

தலை வலிக்கிறது என்று சகுந்தலா சொன்னதும் தன்னுடைய அறையில் இருந்து தைலம் எடுத்துக் கொடுத்தாள் நந்தினி. அதன்பிறகு சாப்பிட்டு தனது அறைக்குப் போனவள் நன்றாக தூங்கிவிட்டு மாலை நேரம் கீழே வந்தாள். காபி கொண்டுவந்து கொடுத்த சகுந்தலாவின் முகத்தில் எந்த சலனமும் இல்லை. தலைவலி குறித்து கேட்டதற்கு மையமாக தலையை ஆட்டிவைத்தாள்.

அடுத்த நாள் பிரகாஷ் மெதுவாக பேச்சைத் தொடங்கினான். இனிமேல் காலையிலும் மதியமும் கீழே அம்மாவுக்கு ஒத்தாசையாக இரு. எப்போதும் உன் அறைக்குள் அடைந்து கிடக்கவேண்டாம். தலை வலிக்கிறது என்று சொன்னால், காபி போட்டுக்கொடு என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

கிழவி போட்டுக்கொடுத்துவிட்டாள் என்று கடுப்பானாள் நந்தினி. காபி வேண்டுமென்றால் என்னிடம் கேட்டிருக்கலாமே, எதற்காக பிள்ளையிடம் சொல்ல வேண்டும் என்று டென்ஷன் ஆனாள். உடனே தோழிகள், அம்மா, அப்பாவிடம் இந்த தகவலை சொன்னாள். ஆளுக்கொரு அபிப்பிராயம் சொன்னார்கள். ஆரம்பத்திலேயே தெளிவாக இரு, பணிந்துவிட வேண்டாம் என்று தோழிகள் உசுப்பேற்றினார்கள். அதனால் அன்றும் நந்தினி கீழே போகவில்லை. மதியம் சாப்பிட கீழே இறங்கியபோது சகுந்தலா சண்டை போடுவாள் என்று எதிர்பார்த்தாள். ஆனால் சகுந்தலா அமைதியாக டி.வி. பார்த்துக்கொண்டு இருந்தாள். காலையில் பிரகாஷுக்கு கொடுத்துவிட்ட குழம்பும் பதார்த்தமும் மட்டுமே இருந்தது. புதிதாக எதுவும் சமைக்கவில்லை என்பது புரிந்தது. அதை மட்டும் சாப்பிட்டு மேலே போனாள். அன்று இரவு கணவன் மனைவிக்குள் முதல் சண்டை தொடங்கியது.

மிகவும் சாதாரணமாக தொடங்கிய பிரச்னை மூன்றே மாதங்களில் கொழுந்துவிட்டு எரிந்தது. யார் யாரோ சமாதானம் செய்வதாக வந்து, பிரச்னையை மேலும் பெரிதாக்கினார்கள். ஒரு கட்டத்தில் தனிக்குடித்தனம் மட்டும்தான் தீர்வு என்பதில் நந்தினி உறுதியாக இருந்தாள். ஒரே பையன் என்பதால் அம்மாவைவிட்டு எங்கேயும் வரமாட்டேன் என்பதில் பிரகாஷ் தெளிவாக இருந்தான்.

அதனால் வரதட்சணை கேட்டு துன்பப்படுத்துவதாக பிரகாஷ் மீது போலீஸில் புகார் கொடுத்தாள் நந்தினி. பெண் போலீஸார் அடித்து அவமானப்படுத்தியதில் மனம் உடைந்துபோனான் பிரகாஷ். அதன்பிறகும் தனிக்குடித்தனத்துக்கு மறுத்தான். எனவே, வரதட்சனை கேட்டதாக அவன் அம்மாவை கைது செய்யப்போகிறார்கள் என்று தெரியவர, தாங்கிக் கொள்ள முடியாமல் தூக்கில் தொங்கிவிட்டான்.

> கிழவி போட்டுக்கொடுத்துவிட்டாள் என்று கடுப்பானாள் நந்தினி. காபி வேண்டுமென்றால் என்னிடம் கேட்டிருக்கலாமே, எதற்காக பிள்ளையிடம் சொல்ல வேண்டும் என்று டென்ஷன் ஆனாள். உடனே தோழிகள், அம்மா, அப்பாவிடம் இந்த தகவலை சொன்னாள்.





## இது யாருடைய தவறு..?

பிரகாஷ் மீதுதான் தவறு. தன்னுடைய தாய் தனக்கு எத்தனை முக்கியம் என்பதையும், தனிக்குடித்தனத்துக்கு வாய்ப்பு இல்லை என்பதையும் நந்தினிக்கு திருமணத்திற்கு முன்னரே கூறியிருக்க வேண்டும். அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை நந்தினிக்கு இருக்கிறதா என்பதை அறிந்து திருமணம் முடித்திருக்க வேண்டும். ஒரு சாதாரண விஷயத்தை தன் குடும்பத்தினர், தோழிகளிடம் பேசிய நந்தினி மீதும் தவறு இருக்கிறது.

## இத்தனை சின்ன விஷயத்துக்காக மனிதன் தூக்குப் போட்டு சாவானா?

இதைவிட மிகச்சாதாரண பிரச்னைக்காக விவாகரத்து வாங்குகிறார்கள், வீட்டைவிட்டு ஓடுகிறார்கள், தற்கொலை செய்கிறார்கள். கண்ணாடி மனதுடன் பிள்ளைகள் வளர்வதால், தங்கள் எண்ணத்துக்கு மாறாக எதுவும் நடக்கக்கூடாது என நினைக்கிறார்கள். பொருளாதார சுதந்திரம் காரணமாக யாரையும் அனுசரிக்க வேண்டியதில்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். அதனால்தான் ஆடை வடிவமைப்பாளர், அழகு நிபுணருக்கு கொடுக்கும் மரியாதையைக்கூட குடும்ப அங்கத்தினருக்குத் தருவதில்லை. தனி மனிதனாக வெற்றியடைந்தாலும், குழுவாக தோல்வியைத் தழுவுகிறார்கள்.

## திருமணம் முடிக்கும் அனைவரும் தனிக்குடித்தனம் நடத்த வேண்டும் என்று சட்டம் போட்டால் பிரச்னை தீருமா?

இன்னும் பிரச்னை அதிகமாகும். நடுவர் இல்லாத பட்டிமன்றம் போல் தம்பதியர் கட்டி உருள்வார்கள். திருமண வயதை அதிகரிப்பதாலும் இந்த பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. மனிதனின் இயல்பை தெரிந்துகொள்வதும், மாமியார் குறித்த மாய பிம்பங்களை உடைப்பதும்தான் திருமண பந்தம் வெற்றி அடைவதற்கான வழி.

## அப்படியென்றால் மனிதனின் இயல்பு என்ன?

கூடி வாழ்வதுதான் மனிதனின் இயல்பு. தனியாக எந்த ஒரு மனிதனாலும் வாழ முடியாது. அதனால்தான் கொடூர குற்றம் செய்பவருக்கு தனிமை சிறை தண்டனை கொடுக்கிறார்கள்.. மிருகம் போல் மனிதனால் தனியனாக வாழமுடியாது. ஏனென்றால் மிருகங்களின் தேவை உணவு மட்டும்தான். ஆனால் மனிதனின் தேவைகள் ஆயிரக்கணக்கானவை. அதனால் ஒவ்வொரு வசதிக்காகவும் ஒருவரையொருவர் சார்ந்துதான் வாழவேண்டும். ஒரு நாள் பால் போடுபவர் வரவில்லை என்றால்கூட தத்தளித்துவிடுவான் மனிதன்.

## ஆனால், மாமியார்கள் கொடுமைப்படுத்துகிறார்களே?

ஒரு நிறுவனத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்தால், வேலையைக் கற்றுக்கொள்ளும் வரையிலும் மேல் அதிகாரி கொடுமைக்காரராகவே தெரிவார். தவறுக்காக கன்னாபின்னாவென்று திட்டுவிழும். அலுவலகம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று இவற்றை ஏற்றுக்கொள்ளும் பெண்களால், மாமியார் சாதாரணமாக பேசுவதைக்கூட ஏற்க முடிவதில்லை. ஏனென்றால் மாமியார் என்றாலே பூதம், வில்லி, கொடுமைக்காரி என்ற இமேஜ் இருப்பதால், ஒரு எதிரியாகவே பார்க்கிறாள். தன் கணவனை தன்னிடம் இருந்து மாமியார் பிரித்துவிடுவார் என்று பயப்படுகிறாள்.

**மந்திரச்சொல்**

சிரமத்தை தாங்கிக்கொள்ளும் உள்ளம் இருந்துவிட்டால், எதையும் கற்றுக்கொள்ள முடியும்.

இதே பயம் மாமியாரிடமும் இருக் கிறது. இத்தனை நாளும் தன்னிடம் இருந்த மகனை ஒட்டுமொத்தமாக பிரித்து விடுவாள் என்று மருமகளை நினைத்து அச்சப்படுகிறாள் மாமியார். இருவரது பயமும்தான் சண்டை, சச்சரவாக வளர்கிறது. யாரும் யாரிடம் இருந்து பிரியப்போவதில்லை, அனைவரும் இணைந்து சந்தோஷமாக வாழப்போகிறோம் என்பதை ஒருவருக் கொருவர் உணர்த்துவதில்தான் திருமண வாழ்க்கையின் வெற்றி இருக்கிறது.

## மாமியார் கொடுமைப் படுத்தினால் என்னதான் செய்யவேண்டும்?

பொறுமையும், புன்னகையும் பெண்ணின் ஆயுதம். ஆதலால் அன்பு செலுத்து. அன்பினால் மட்டும்தான் கொடுமையை எதிர்த்து வெல்லமுடியும். புகுந்த வீட்டில் ஒரு பெண் வெல்ல வேண்டிய முதல் ஆள் மாமியார்தான். ஆனால், கணவனை கைக்குள் போடுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் சிறிதும் மாமியாரை கவர எடுப்பதில்லை. மாமியாரை வென்றுவிட்டால், ஆட்டுக்குட்டி போல் பின்னே வந்துவிடுவான் மகன்.

## மாமியாரை வெல்ல முடியவில்லை என்றால்..?

வரும் காலத்தில் நீ எப்படிப்பட்ட மாமியாராக இருக்க விரும்புகிறாயோ, அப்படி இப்போதே இருந்துகாட்டு. அதாவது மாமியாரை உன் மருமகளாக நினைத்துக் கொள். முடியும் என்று நம்பு. விடியும்.



# லஞ்சம் எனும் பேரழகி..!

ஞானகுருவை சந்தித்த மகேந்திரனுக்கு 25 வயது இருக்கலாம். கேட்கலாமா வேண்டாமா என்ற தயக்கத்துடனே பேச்சைத் தொடங்கி, சுற்றி வளைத்து, எதையெதையோ பேசிவிட்டு, கடைசியாக மனதில் இருப்பதை கேட்டேவிட்டான்.

‘‘நான் இப்போது அரசு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்துள்ளேன். என்னுடன் வேலை செய்யும் பலரும் லஞ்சம் வாங்குகிறார்கள். நான் லஞ்சம் வாங்கவில்லை என்றாலும் என் பெயரைச் சொல்லி அவர்கள் வாங்கிக்கொள்கிறார்கள். இதில் எந்த தவறும் இல்லை, எல்லோரும்தான் வாங்குகிறார்கள் என்று ஆசை காட்டுகிறார்கள். நான் எந்த நிமிடமும் மாறிவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது... எப்படி நான் உறுதியுடன் இருப்பது?” என்று கேட்டான்.


www.gyanaguru.com
www.gyanaguru.com

மகேந்திரன் தலையில் வைத்து ஆசிர்வாதம் செய்த ஞானகுரு, ''முனிவர்களின் தவத்தை கலைக்க அழகிகளை தேவேந்திரன் அனுப்புவது போன்று, மனிதனுக்கு ஆசையை உருவாக்க பலரும் முயற்சி செய்வார்கள். ஏனென்றால், அவர்கள் செய்யும் தவறுகளுக்கு, துணை தேடிக்கொள்ள ஆசைப்படுவார்கள்.

லஞ்சம் என்பது ஒரு பேரழகி. அவளை பார்த்தவுடன் தொட்டுக்கொள்ளவும் கட்டிக்கொள்ளவும் ஆசை வரத்தான் செய்யும். ஆனால், அவள் ஒரு மாய பிம்பம். உன் கண் முன்னே இருந்தாலும், அவள் உன் பிடியில் ஒருபோதும் சிக்க மாட்டாள். ஆனாலும், நீ அவளுடைய கனவில் இருந்து விடுபட முடியாது.

லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் ஒருபோதும் நிற்கப்போவதில்லை. ஏனென்றால், கடவுளுக்கு லஞ்சம் அதாவது காணிக்கை கொடுத்து, தங்கள் காரியத்தை சாதிக்க ஆசைப்படும் மனிதர்கள், அது தவறு என்று உணர்வதே இல்லை. கடவுளையே ஏமாற்ற நினைப்பவர்கள், சக மனிதன் நேர்மையாக இருப்பதை விரும்ப மாட்டார்கள். அதனால், அவர்கள் கூட்டத்தில் உன்னையும் சேர்வதற்கு வற்புறுத்தவே செய்வார்கள்.

இன்று உன் மனதில் இருக்கும் உறுதி நாளையும் இருக்குமா என்பது எனக்குத் தெரியாது. ஏனென்றால், உனக்கும் ஏதேனும் ஒரு அவசியம் வரும். அப்படிப்பட்ட பலவீனமான நேரத்தில் உன்னை ஜெயிப்பதற்காக லஞ்சம் காத்திருக்கும்.



எனவே, மனம் பலவீனம் அடையும்போது நான் கூறுவதை ஞாபகம் வைத்துக்கொள். அதாவது, நீ பணியில் இருந்து ஓய்வு பெறும் நாளில் என்ன நடக்கும் என்று கற்பனை செய். நீ எத்தனை பணம் சேர்த்திருக்கிறாய் என்று யாரும் பார்க்கப்போவதில்லை. நீ எப்படி பணியாற்றினாய், இந்த காலத்திலும் நீ எத்தனை உறுதியுடன் நேர்மையாக இருந்தாய் என்பதை மட்டும்தான் சிலாகித்துப் பேசுவார்கள், மதிப்பார்கள். உன் மீது எந்த வழக்கும் இருக்காது. நீ நிம்மதியாக வீடு திரும்பலாம்.

லஞ்சம் வாங்காமல் மனதை சமாதானப்படுத்த இன்னொரு வழியும் இருக்கிறது. அதாவது, இன்றுதான் நீ வேலையில் இருக்கும் கடைசி நாள் என்ற எண்ணத்துடன் வேலைக்குச் செல். அதாவது நாளையே நீ மரணம் அடைந்து போகலாம் அல்லது இந்த உலகம் அழிந்துபோகலாம் என்ற எண்ணத்துடனே வேலைக்குச் செல்.

நாளை மரணம் அல்லது உலகம் அழியப்போகிறது என்பதை கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கலாம், ஆனால் அப்படி நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்துகொள். அதனால் எதிர்காலம் இல்லாத ஒருவனுக்கு லஞ்சம் வாங்கி சொத்து சேர்க்கவேண்டிய எந்த அவசியமும் இல்லை. கண்ணுக்கு முன்னே மரணம் இருப்பதை அறிந்துகொண்டால், ஒருபோதும் யாருக்கும் துரோகம், துன்பம் இழைக்க மனம் வராது. லஞ்சம் வாங்கவும் தோன்றாது.

உனக்கு இப்போது அரசு மட்டும்தான் எஜமானாக இருக்கிறது. லஞ்சம் வாங்கத் தொடங்கினால், உனக்கு கப்பம் கட்டும் ஒவ்வொரு நபரும் எஜமானர்கள். நீ, அவர்களுடைய அடிமை நாய் என்பதை புரிந்துகொள்.

லஞ்சம் வாங்குவதற்கு என் குடும்பம்தான் தூண்டியது என்று சிலர் சொல்வதை நம்பாதே. அப்படி தூண்டுவது ஒரு நல்ல அம்மா, மனைவி, குழந்தைகளுக்கு அழகல்ல. எந்த ஒரு தாயும், எந்த ஒரு நல்ல மனைவியும் லஞ்சம் வாங்குவதையும், அதனால் ஏற்படப்போகும் பின்விளைவுகளையும் விரும்பவே மாட்டார்கள். எனவே, லஞ்சம் வாங்குவதை தாய்க்கும் மனைவிக்கும் செய்யும் துரோகமாக எண்ணிக்கொள். அதன்பிறகு உனக்கு லஞ்சம் வாங்கும் எண்ணம் வராது.

அரசு பணி என்பது வரம். மக்களுக்கு நேரடியாக சேவை செய்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு. அதை நழுவ விடாதே. அதேநேரம் அரசு பணியில் இருக்கும் ஒவ்வொராலும் கார், வீடு போன்றவை நிச்சயம் வாங்க முடியும். அதுவே லஞ்சம் வாங்குவதால் பெரிய வீடு, பெரிய கார் வாங்கலாம். அவ்வளவுதான். எத்தனை பெட்ரூம் வீடு வாங்கினாலும், உன்னால் ஓர் அறையில்தான் படுத்து உறங்க முடியும் என்பதை புரிந்துகொள்.

கொஞ்ச நாட்கள்தான் உன்னை அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் லஞ்சம் வாங்குவதற்கு வற்புறுத்துவார்கள். அதன்பிறகு, 'பிழைக்கத்தெரியாத பைத்தியம்' என்று பட்டம் கட்டிவிட்டு போய்விடுவார்கள். நிம்மதி இல்லாத கோடீஸ்வரனாக காலம் தள்ளுவதைவிட, சந்தோஷமான பைத்தியக்காரனாக இருப்பது நல்லது மகனே...'' என்று முடித்தார்.

''திடீரென எனக்கோ என் குடும்பத்தாருக்கோ லட்சக்கணக்கில் செலவழிக்கக்கூடிய நோய் வந்துவிட்டால், எப்படி சமாளிப்பேன்..?''

''சமாளிக்க நினைக்காதே... செத்துப்போ...''

மகேந்திரன் கண்களில் உறுதி தெரிந்தது.







# முடிந்தது, முடிந்து போனதுதான்..!

மனிதர்களில் பெரும்பாலோருக்கு உடலும் மனமும் கெட்டுப்போவதற்கு மிகவும் முக்கியமான காரணம் என்ன தெரியுமா? தன்னால் எதுவுமே செய்யமுடியாத விஷயங்களைக்கூட, அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை இல்லாததுதான். இதற்கும் உடல் கெடுவதற்கும் என்ன காரணம்? இந்தக் கதையில் ஒருவேளை விடை கிடைக்கலாம்.

ரோஸி கடுமையான படிப்பாளி. பரிட்சை வருகிறது என்றால் இரவும் பகலுமாக படிப்பாள். சோறு, தண்ணீர் எல்லாம் அவளுக்கு இரண்டாம் பட்சம்தான். பரிட்சை நேரங்களில் யாரும் தன்னுடன் பேசுவதையும், விளையாடுவதையும் விரும்பமாட்டாள். ஆனாலும் வழக்கமாக அவளுடைய உழைப்புக்கு ஏற்ப மதிப்பெண்கள் கிடைப்பதில்லை. 70 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் மதிப்பெண்கள் மட்டுமே வாங்கிவந்தாள். அவளைப் பொறுத்தவரை அப்படி எடுப்பதே சாதனை என்று எடுத்துக்கொண்டாள்.

கல்லூரியில் இதுவரை நடந்த அனைத்து செமஸ்டர்களிலும் எல்லா பாடங்களிலும் பாஸ் ஆகிவிட்டாள். கடைசி செமஸ்டர், கடைசி பரிட்சை மட்டுமே மிச்சம் இருந்தது. இன்னும் ஒரே பரிட்சையுடன் தன்னுடைய கல்லூரிப் படிப்பு முடியப்போகிறது என்ற சந்தோஷமும், நிறைவும் அவளுக்கு வந்துவிட்டது. அதனால் கடைசி பரிட்சைக்கு நன்றாக படிப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தாலும், அவளை மீறி மனம் என்னமோ குதூகலத்திற்குத்தான் சென்றது. எப்படியோ படித்துமுடித்து பரிட்சைக்குப் போனாள்.

கேள்வித்தாளை பார்த்ததும் ஒரு கணம் ஆடிப்போய்விட்டாள். அனைத்து கேள்விகளும் எங்கேயோ படித்த மாதிரியும் இருந்தது, படிக்காத மாதிரியும் இருந்தது. மிகவும் கலங்கிப்போனவள் இருப்பதிலேயே தனக்கு நன்றாகத் தெரிந்த ஒரு கேள்வியைத் தேர்வு செய்து முதல் பதிலாக நன்றாக எழுதிவைத்தாள். அதற்குப் பின் மற்ற கேள்விகளுக்கு ஓரளவு சுமாராக பதில் எழுதிவைத்தாள். வழக்கம்போல் 70





> தோழிகள் அனைவரும் விடுமுறையில் சந்தோஷமாக, ஜாலியாக பொழுது போக்கிக்கொண்டிருக்க தனியறையில் அடைந்து சோகத்தில் மூழ்கிக்கிடந்தாள் நான்ஸி. யார் யார் சமாதானம் சொன்னாலும் எடுபடவில்லை. பரிட்சை ரிசல்ட் வரும் நாள் வந்தது.

மதிப்பெண் கிடைக்காது என்றாலும் 50 முதல் 60 மட்டும்தான் கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டாள்.

பரிட்சை எழுதிவிட்டு ஹாலைவிட்டு வெளியே வந்தாள் ரோஸி. தன்னுடைய தோழியைப் பார்த்து ஒரே ஒரு கேள்விக்கு மட்டும்தான் நன்றாக பதில் தெரிந்தது என்று முதல் கேள்வியையும் தான் எழுதிய பதிலையும் சொன்னாள்.

நீ தவறான பதிலை எழுதியிருக்கிறாய் என்று தோழி விளக்கமாக எடுத்துச்சொன்ன பிறகுதான் அவளுக்கு, தான் செய்த தவறு புரிந்தது. தேவை இல்லாமல் முதல் கேள்விக்கு மிகவும் அழுத்தம் கொடுத்து, மிகவும் விரிவாக தவறான பதிலை எழுதிவிட்டோமே என்று நொந்து போய்விட்டாள். தான் இந்தப் பரிட்சையில் நிச்சயம் ஃபெயில் ஆகிவிடுவோம் என்ற பயத்தில் வேதனைப்பட தொடங்கினாள். வீட்டில் பெற்றோர், உறவினர், நண்பர்கள் அனைவரிடமும் தன்னுடைய சோகத்தை சொன்னாள்.

முதல் கேள்வி தவறாக இருந்தாலும் பரவாயில்லை, மற்ற கேள்விகளுக்கு நீ எழுதியிருக்கும் பதிலைப் பார்த்து சரியாகவே மதிப்பெண் போடுவார்கள். அதனால் கவலை இல்லாமல் இரு, நீ தோல்வியடைய வாய்ப்பு இல்லை என்று எத்தனையோ பேர் எடுத்துச்சொன்னாலும் நான்ஸியின் மனம் சமாதானம் அடையவில்லை. இரவும் பகலும் எழுதிமுடித்த பரிட்சை பற்றிய கவலையிலே இருந்தாள். இதுவரை வாழ்வில் ஒரு முறைகூட ஃபெயில் ஆனதில்லை, இந்த பரிட்சையில் தோல்வி அடைந்தால் அவமானமாகிவிடும் என்று அச்சப்பட்டாள்.

தோழிகள் அனைவரும் விடுமுறையில் சந்தோஷமாக, ஜாலியாக பொழுது போக்கிக்கொண்டிருக்க தனியறையில் அடைந்து சோகத்தில் மூழ்கிக்கிடந்தாள் நான்ஸி. யார் யார் சமாதானம் சொன்னாலும் எடுபடவில்லை. பரிட்சை ரிசல்ட் வரும் நாள் வந்தது. எப்படிப்பட்ட ரிசல்ட் வந்தாலும் கவலையில்லை என்று வீட்டினர் சமாதானப்படுத்தினார்கள். சமாதானம் ஆனவள் போல் படுக்கச்சென்ற நான்ஸி, அன்று இரவு தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டாள். அடுத்த நாள் வந்த பரிட்சை முடிவில் வழக்கம்போல் 72 மதிப்பெண்கள் வாங்கியிருந்தாள் நான்ஸி. ஆனால், அதைப் பார்க்கத்தான் அவள் உயிருடன் இல்லை.

பரிட்சை எழுதுவது வரை மட்டுமே தன்னுடைய பணி. அதன் முடிவு எப்படியிருந்தாலும், அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நான்ஸிக்கு இல்லாததும், முடிவுக்கு காத்திருக்கும் பொறுமை இல்லாததும்தான் நான்ஸியின் மரணத்துக்குக் காரணம். நான்ஸியின் மரணத்தால் அவளது பெற்றோர் நொறுங்கிபோனார்கள் என்பதை சொல்லவே வேண்டியதில்லை. இப்படித்தான் பெரும்பாலான மனிதர்கள் தன்னை மீறிய விஷயங்களுக்கு எல்லாம் கவலைப்பட்டு, தேவையற்ற துன்பத்தை வாங்கிக்கொள்கிறார்கள்.

**பரீட்சை சரியாக எழுதவில்லை என்றால் கவலை இருக்கத்தானே செய்யும்..?**

நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். ஆனால், அப்படி நீ கவலைப்படுவதால் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்துவிடுமா? நீ எழுதியதுதான் சரியான பதில் என்று மாற்றம் நிகழ்ந்துவிடப் போகிறதா..? அப்படி எதுவும் நடக்கப்போவதில்லை. முடிந்ததை, முடிந்துபோனதாக எடுத்துக்கொள்வதும், தன் கையில் இனி எதுவும் இல்லை என்று எடுத்துக்கொள்வதும்தான் சரியான செயல்.

**ஆனால், நடந்ததற்கு கவலைப்படுபவர்கள் சிறிய சதவிகிதம்தானே?**

இல்லை. நான்ஸியைப் போன்று மரணம் வரை செல்லும் நபர்கள் வேண்டுமானால் குறைவாக இருக்கலாம், ஆனால் 99 சதவிகிதம் பேர் தேவையற்ற சாதாரண விஷயங்களுக்குத் தான் அதிகம் கவலைப்படுகிறார்கள்.

எப்போதோ குறைந்த விலைக்கு விற்றுவிட்ட ஒரு வீட்டுக்காக காலம் முழுவதும் கவலைப்படுகிறார்கள். அப்போது, என்ன சூழ்நிலையில் விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை இப்போது நினைப்பது கிடையாது.

சாதாரண விஷயங்களுக்கும் கவலைப்படுகிறர்கள். அதாவது, சந்தோஷமாக பொழுதுபோகவேண்டும் என்று சினிமா தியேட்டருக்கு சென்றால், அங்கேயும் இன்பமாக இருப்பதில்லை. தியேட்டருக்கு சென்றதும், இன்னமும் அரங்கம் திறக்கவில்லையே என்று கவலைப்படுவார்கள். அரங்கத்தை திறந்து இருக்கையில் அமர்ந்ததும், இன்னமும் படம் போடவில்லையே என்று கவலைப்படுவார்கள். தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் ஏதோ பெரிய வேதனையில் இருப்பதுபோல் நெளிவார்கள். விளம்பரப் படங்கள் போட்டால் எரிச்சல் அடைவார்கள். அக்கம்பக்கத்தில் யாராவது பேசினால் கோபமாவார்கள். இவர்களது கவலைக்கும் கோபத்துக்கும் எந்த அர்த்தமும் இல்லை என்பதை உணர்வதே இல்லை. இதில் எந்த ஒரு விஷயமும் அவர்கள் கையில் இல்லை என்பதும் தெரிவதில்லை.

**மந்திரச்சொல்**

"ஒரு மில்லிமீட்டர் புன்னகை, நினைக்கமுடியாத அளவுக்கு நம்பிக்கை தரும்.."

**இதுபோன்ற நேரத்தில் என்ன செய்யவேண்டும்?**

ரயிலுக்காக காத்திருக்கிறீர்கள். தாமதமாக வரும் என தெரியவருகிறது. உங்களால் அங்கே எதுவும் செய்யமுடியாது என்ற உண்மை புரியவேண்டும். இன்னமும் ரயில் வரவில்லையே என்று கடிகாரம் பார்த்துப்பார்த்து டென்ஷன் ஆவதைவிடுத்து, இன்று கூடுதலாக கொஞ்சநேரம் பிளாட்ஃபாரத்தில் இருப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று அக்கம்பக்கத்து பயணிகளை பார்த்து ரசிக்க முடியும்.

ஊரில் இருந்து வீட்டுக்கு வரும் உறவினர் பஸ் ஏறிவிட்டதாக போன் செய்து ஒரு மணி நேரம் ஆனதால், ரோட்டிற்கும் வீட்டுக்கும் அலைவதில் எந்த பிரயோஜனமும் இல்லை. ரோடு வரை வந்தவர் நிச்சயம் வீட்டுக்கும் வரத்தான் செய்வார். அந்த நேரத்தில் உறவினருக்குத் தேவையான எதையாவது தயார் செய்துவைக்கலாமா என்று யோசிக்க வேண்டுமே தவிர, வீணாக டென்ஷன் ஆவதில் பிரயோஜனமில்லை. மூன்றாம் மாடியில் இருந்து முதல் மாடிக்கு லிஃப்ட் வருவதற்குள் முப்பது முறை பட்டனை அழுத்தும் ஆசாமிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு முறை அழுத்தினாலும் முப்பது முறை அழுத்தினாலும் விளைவு ஒன்றுதானே… காத்திருக்கும் பொறுமை இல்லையென்றால் மனம் எரிச்சல் அடையும். மனம் குப்பையாகும்போது ஜீரண சக்தி குளறுபடியாகும். ஜீரணம் சிக்கலானால் உடலின் அனைத்து பாகங்களுக்கும் பிரச்னை ஏற்படவே செய்யும்.

**அப்படியென்றால் எப்படிப்பட்ட மன நிலையுடன் காத்திருக்க வேண்டும்?**

காத்திருக்கிறோம் என்ற எண்ணமே இல்லாதவண்ணம் ஒரு நல்ல அனுபவத்திற்காக மட்டுமே காத்திருக்க வேண்டும். ஏனென்றால் காத்திருக்கிறோம் என்ற எண்ணமே தீவிரமான மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடும். உன்னால் எதுவும் செய்யமுடியாத நேரத்தில் அமைதி யாக வேடிக்கை பார், வாழ்க்கை சுவாரஸ்யமாகிவிடும். எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளும் ஏகாந்த நிலையை மனம் பெற்றுவிடும். காத்திருக்க கற்றுக்கொள்ளுங்கள்.

www.gyanaguru.com

www.gyanaguru.com

# உடல் வலியா? சூரியனிடம் சொல்!

எந்த உற்சாகமும் இல்லாமல் வந்துசேர்ந்தார் மகேந்திரன். ‘‘பரிசோதனை செய்துவிட்டேன். உடலில் எந்த நோயும் இல்லை. நன்றாகவே சாப்பிடுகிறேன். தூக்கமும் வருகிறது. ஆனால், நீண்ட நாளாகவே காரணமின்றி வலிக்கிறது... நான் என்ன செய்வது? முன் ஜென்மத்து வினைதான் காரணமாக?’’ என்று கேட்டார்.

‘‘கேள்வியைக் கேட்டு, நீயே ஒரு பதிலும் வைத்திருக்கிறாய். பிறகு என்ன, அப்படியே வலியை ஏற்றுக்கொள்...’’ என்று ஞானகுரு சிரித்ததும், சட்டென்று தன் தவறை உணர்ந்தார்.

‘‘மன்னிக்கணும் சாமி. முன் ஜென்மம், மறு ஜென்மத்தை நீங்க மதிக்க மாட்டீங்க. நான் வலியில் என்ன பேசுறேன்னுகூட தெரியலை, முதுகு, தசை, எலும்புன்னு எல்லாமே வலிக்குது..’’

‘‘காரணமின்றி வலித்தால், அதை சூரிய பகவானிடம்தான் சொல்ல வேண்டும். கடைசியாக எப்போது சூரியனை தரிசித்தாய்..?’’

‘‘வீட்டு வாசலில் கார். அலுவலகத்திற்கு காரில் போகிறேன். அலுவலகம் முழுவதும் ஏசி. இருட்டிய பிறகே வீட்டுக்கு வருகிறேன். சூரியனை ஞாயிற்றுக் கிழமை ஜன்னல் வழியே பார்த்தால்தான் உண்டு. எங்கேனும் வெளியூர் பயணம் சென்றபோது கொஞ்சநேரம் வெயிலில் நடந்திருக்கலாம்...’’ என்று முடித்தார்.

‘‘இனி, நீ அலுவலகத்துக்கு வெயிலில் நடந்துசெல். அதுதான் உனக்கான மருத்துவம். வைட்டமின் டி பற்றாக்குறை மட்டும்தான் உடலின் அத்தனை அவயங்களுக்கும் வலி கொடுக்கக்கூடியது. உனக்கு ஓர் உண்மை தெரியுமா? பழங்களாலும், காய்களாலும், தானியங்களாலும் கொடுக்க முடியாத டி வைட்டமின் சூரியனில் மட்டும்தான் இருக்கிறது. அது, உன் தோலில் இருந்துதான் உற்பத்தியாக வேண்டும்.

அதனால் தினமும் நீ வெயிலில் நடக்க வேண்டும். அப்போதுதான் வைட்டமின் டி மூலம் உடல் முழுவதும் சூரியன் செல்லும். சூரிய வெப்பம் இல்லையென்றால் தசையில் பிடிப்பு, நரம்பு மண்டலத்தில் எரிச்சல், எலும்புகளில் பலவீனம் உருவாகும். ஆனால், இவற்றை நீ பரிசோதனை மூலம் எளிதில் கண்டறிய முடியாது. அதனால் வலி தீரவேண்டுமென்றால், தினமும் 10 நிமிடம் வெயிலில் நில்’’ என்றபடி வெயிலில் நடை போட்டார் ஞானகுரு. கையில் இருந்த மொபைலில் வேகவேகமாக கூகுள் செய்துபார்த்த மகேந்திரன், சூரிய ஒளி பற்றி ஞானகுரு சொன்னது அப்படியே உண்மை என்று அறிந்து ஆச்சர்யத்தில் நின்றார்.





# வீடு முழுவதும் குப்பைகள்..!

முகம் முழுக்க சோகத்துடன் வந்து நின்றான் மகேந்திரன். “சாமி, மாச சம்பளக்காரன். எவ்வளவுதான் சிக்கனமா செலவழிச்சாலும் மாசக் கடைசியிலே கடன் வாங்க வேண்டியதா இருக்குது. இப்போ திடீர்னு ஆஸ்பத்திரி செலவு வந்து நிக்குது, நான் செய்வது? எங்களை மாதிரி ஆளுங்க நிம்மதியா வாழவே முடியாதா..?” கிட்டத்தட்ட அழும் நிலையில் கேட்டான்.

“உன்னை பார்த்தால் பாவமாக இருக்கிறது. சரி, உன்னுடைய சம்பளத்தை இரண்டு மடங்காக கூட்டிவிட்டால், போதுமான அளவுக்கு சேமிப்பு செய்து, சிக்கல் இல்லாமல் வாழ்வாயா..?”

மகேந்திரன் முகத்தில் ஆயிரம் வாட் பல்ப் எரிந்தது. “சாமி, அப்படி மட்டும் ஏதாவது மாயமந்திரம் செஞ்சு நடக்க வைச்சீங்கனா, என் ஜென்மம் உள்ள வரைக்கும் உங்களை மறக்கவே மாட்டேன்” கையெடுத்து கும்பிட்டான்.

சட்டென்று சிரித்தார் ஞானகுரு. “நீ என்னை மறக்காமல் இருப்பதால் எனக்கு என்ன லாபம்..?”

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் விழித்தான் மகேந்திரன்.

”மகேந்திரா… சம்பள உயர்வு என்பது ஒரு மாயை. இதற்கு முன்பு உனக்கு எத்தனையோ முறை சம்பள உயர்வு கிடைத்திருக்கிறது. அந்த நேரத்தில் கூடுதலாக உனக்கு கிடைத்த பணத்தை நீ சேமித்து வைத்தாயா..? இல்லையே… அதனால் இனி இரண்டு மடங்கு கிடைத்தாலும், அதையும் செலவு செய்வாயே தவிர சேமிக்க மாட்டாய். சரி, வீட்டில் நீ எவ்வளவு குப்பைகளை சேமித்து வைத்திருக்கிறாய்..?” கேள்வி புரியாமல் விழித்தான்.

‘‘நான் குப்பை என்று சொல்வது, தேவை இல்லாமல் நீ வாங்கி சேர்த்து வைத்திருக்கும் பொருட்கள். உன் பரண் மீது கிடக்கும் பொருட்களை எப்போதாவது எடுத்து பார்த்திருக்கிறாயா..? 3 மாதங்கள் ஒரு பொருள் உனக்கு பயன்படவில்லை என்றால், அந்த பொருள் இல்லாமல் நீ காலம் முழுவதும் வாழமுடியும் என்ற உண்மை தெரியுமா?

கட்டில், மெத்தை, டைனிங் டேபிள், வாஷிங் மெஷின், வாட்டர் ஃபில்டர், கிரைண்டர் கார் போன்றவற்றை அத்தியாவசியமாக நீ நினைக்கிறாய். ஆடைகள் வாங்கி குவிப்பதும், மிகப்பெரிய பள்ளியில் அதிக கட்டணம் கொடுத்து பிள்ளையை படிக்க வைப்பதும் உனக்கு முக்கியமாகிவிட்டது. அரசு பள்ளியில் படிக்க வைப்பதும், பொது போக்குவரத்தை பயன்படுத்துவதும் உனக்கு எத்தனை பணத்தை மிச்சப்படுத்தும் என்பது தெரியுமா?

பக்கத்துவீட்டு மனிதன் சிங்கப்பூருக்கு சுற்றுலா போய்வந்தால், நீயும் ஏதாவது ஒரு நாட்டுக்கு போகவேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகிவிடுகிறாய். வாரம் ஒரு முறை ஹோட்டலில் சாப்பிடுவதும், வீட்டுக்கு உணவு ஆர்டர் செய்வதும் உன் சம்பளத்தில் எத்தனை சதவிகிதம் என்பது தெரியுமா?

இப்படி நீ வாங்கும் ஒவ்வொரு பொருளும் உனக்கு சுமை என்பதை உணர்ந்துகொள். ஒவ்வொரு பொருளும் உன்னை அடிமையாக்கிவிடும். காரில் போய் பழகிவிட்டால், உன்னால் ஒருபோதும் பஸ், ரயிலில் பயணம் செல்ல மனம் வராது. காரை பழுதுபார்க்க எத்தனை செலவழிக்கவும் தயாராகவே இருப்பாய்.

எனவே, முதலில் உன் வீட்டில் இருந்தும் மனதில் இருந்தும் குப்பைகளை வெளியே தூக்கிப்போடு. இந்த குப்பைகள்தான் உன் பணத்தை தின்று கொழுக்கின்றன.

ஒவ்வொரு செலவு செய்யும்போதும், இது தேவைதானா என்று உன்னை நீயே கேட்டுக்கொள். செலவு செய்வதை முடிந்த வரையிலும் தள்ளிவை. அப்படி தள்ளி வைக்கும்போது, அந்த பொருளுக்குத் தேவை ஏற்படாமலே போகும் என்பதை நீயே உணர்ந்துகொள்ள முடியும்.

நீ மிச்சப்படுத்தும் ஒவ்வொரு செலவும், வெளியேற்றும் ஒவ்வொரு குப்பையும் உனக்கான சம்பள உயர்வுதான்” என்றார் ஞானகுரு.

பதில் சொல்ல முடியாமல் திரும்பினான் மகேந்திரன்.

# வெற்றிபெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலியா..?



மலர்களை ரசித்துக்கொண்டிருந்த ஞானகுருவின் பின்னே வந்துநின்ற மகேந்திரன், ஒரு சந்தேகம் கேட்டார். ‘சுவாமி, எனக்குத் தெரிந்த நண்பர் கடினமான உழைப்பாளி. அவர் தொடங்கிய ஹோட்டல் மிகப்பெரிய வெற்றி கிடைத்துவிட்டது. அவரது கடுமையான உழைப்புக்கும், அனுபவத்திற்கும் கிடைத்த வெற்றி என்று நான் சந்தோஷப்பட்டேன்.

ஆனால் அவரோ, ‘எனக்கு கடவுளின் மிகப்பெரிய ஆசிர்வாதம் கிடைத்துவிட்டது என்று, ஒவ்வொரு கோயிலுக்கும் போய் எக்கச்சக்கமாக பணத்தை உண்டியலில் போட்டு வருகிறார்.. ஏன் இப்படி நடந்துகொள்கிறார்..? இந்த வெற்றி அவரது உழைப்புக்கும் புத்திசாலித்தனத்துக்கும் கிடைத்தது இல்லையா?” என்று கேட்டார்.

‘‘இந்த உலகத்தில் எல்லோருக்குமே வெற்றி கிடைக்கவேண்டும் என்ற ஆசை உண்டு. அதே நேரம் தனக்கு வெற்றி கிடைக்காது என்ற அவநம்பிக்கையும் உண்டு. அப்படி ஒரே நேரத்தில் நம்பிக்கையும், அவநம்பிக்கையும் கொண்ட நபர்களுக்கு வெற்றி கிடைக்கும்போது, ’இந்த வெற்றிக்கு நான் தகுதியானவனா?’ என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. அதேநேரம், இந்த வெற்றி நிலைக்காமல் போய்விட வாய்ப்பு உண்டு என்ற அச்சமும் வந்துவிடுகிறது. அதனால், கிடைத்துவிட்ட வெற்றியைத் தக்கவைக்க ஜோதிடம், கோயில் என்று போய் நம்பிக்கையை வளர்த்துக்கொள்கி றார்கள். அவர்கள்தான் கைகளில் ராசிக்கல் அணிகிறார்கள், பெயர் மாற்றுகிறார்கள். வாஸ்து பார்த்து வீடு கட்டுகிறார்கள்.

பொதுவாக சினிமா கலைஞர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும்தான் இப்படி எதிர்பாராத திடீர் அதிர்ஷ்டம், மாபெரும் வெற்றி கிடைக்கிறது. அதனை, தன்னுடைய உழைப்புக் கிடைத்த வெற்றி என்று அவர்களாலே நம்ப முடிவதில்லை. அதனால், இந்த வெற்றிக்குக் காரணம் இறைவன், குடும்பம் அல்லது டீம் என்று நம்புவார்கள். உண்மையில், அவர்தான் அந்த வெற்றிக்கு முழு காரணமாக இருப்பார். ஆனால், இதற்கு முன்பு ஏகப்பட்ட தோல்விகளை பார்த்திருப்பதால், இப்போதைய வெற்றியை நம்பமுடியாமல் தவிப்பார்.

இப்படிப்பட்ட மனிதர்கள் உலகம் முழுவதும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏன் இவர்கள் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று மருத்துவர்களிடம் கேட்டால், இம்போஸ்டர் சிண்ட்ரோம் என்று அவர்கள் சொல்லக்கூடும். அதாவது, குருட்டு அதிர்ஷ்டத்தால் அல்லது ஏதோ ஒரு மோசடியால் வெற்றி கிடைத்திருக்கிறது என்று நினைப்பார்கள். அதனால், இந்த உண்மை யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில்தான் கோயில் கோயிலாக ஏறி இறங்குவார்கள்...”

“இவர்கள் என்னதான் செய்யவேண்டும்?”

“இந்த வெற்றிக்குக் காரணம் அவர்தான், இதனை அனுபவிக்கும் தகுதியும் அவருக்கு உண்டு என்பதை நம்ப வேண்டும். அவரது கனவு, அனுபவம், விடா முயற்சியாலே இந்த வெற்றி கிடைத்துள்ளது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்துவிடாது என்பதையும், இந்த உலகில் எதுவும் காரணமின்றி கிடைப்பதில்லை என்பதையும் புரிந்துகொண்டு, கிடைத்த வெற்றியை ஆனந்தமாக அனுபவிக்க வேண்டும்” என்றார்.

“எப்படிப்பட்ட வெற்றி என்றாலும் கடவுளுக்கு நன்றி சொல்லலாம்தானே..?”

‘‘அவரது நன்றிக்காக எந்த ஒரு கடவுளும் காத்திருக்கவில்லை... அவரது நன்றியால் கடவுளுக்கு ஆகப்போவது எதுவும் இல்லை...’’ என்றபடி தோட்டத்தில் நடை போட்டார் ஞானகுரு.

## மந்திரச்சொல்

கடினமாக உழைத்தும் சோர்வு தெரியவில்லையா? அதுதான் உனக்குப் பிடித்த வேலை.

# மனம் விட்டு பேசலாம் வாங்க

மகிழ்ச்சியை மனதார ஏற்றுக்கொள்வது போல், வாழ்வின் துன்பத்தையும் சில நேரங்களில் மனதார ஏற்கத்தான் வேண்டும். காலம் எல்லா துன்பங்களையும் துடைத்து தள்ளிவிடும் என்றாலும், அதுவரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆம், துன்பத்தில் இருப்பவர்கள் மனம்விட்டுப் பேசுவது ஓர் எளிய தீர்வு.

எல்லோருக்கும் துன்பத்தை கொட்டித் தீர்ப்பதற்கு தாயின் தோள்கள் கிடைத்துவிடு வதில்லை. உங்கள் சோகங்களைக் கேட்பதற்கும் ஆறுதல் சொல்வதற்கும் ஞானகுரு மையம் இருக்கிறது.

உங்கள் மனதில் இருக்கும் அத்தனை பாரங்களையும் இறக்கி வைக்க வாருங்கள். ஞானகுரு மைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கு கட்டணம் உண்டு.

உங்கள் தேவைக்கு தொடர்புகொள்ளுங்கள்...




## ஞானகுரு மகிழ்ச்சி

**நிறுவனர் :** எஸ்.கே.முருகன், **வெளியீட்டாளர் மற்றும் ஆசிரியர் :** எம்.நிர்மல், **நிர்வாக மேலாளர் :** எம்.நிலா

**வடிவமைப்பாளர்:** வி.கிராபிக்ஸ், கே.எம்.பிரசன்னா

ஞானகுரு பப்ளிகேஷன், 22, நாகார்ஜூனா நகர் 2வது தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

**தொடர்புக்கு :** 044 24730338, +91 98844 53014, +91 81486 14112 **மெயில் :** skmnila1@gmail.com